சான்றோர் பெருமக்களில் சிலர் அஸ்திவார கற்களைப் போல தம்மை மறைத்துக்கொண்டு பிறரது திறமைகளுக்கு மேடை அமைத்துக் கொடுப்பர். அவர்கள் புகழ் பெற வழிவகுப்பர். ஆனால் அவர்கள் தம்மை ஒருபொழுதும் முன்னிலைப்படுத்திக் கொள்ள விரும்பமாட்டார்கள். திரைமறைவில் இருந்து கொண்டு பிறரது உயர்வுக்கு உறுதுணையாக இருப்பர். பிறர் முன்னேற்றத்தை கண்டு பெருமகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் அடைவர். ஆன்றோர்களையும் சான்றோர்களையும் அறிஞர் பெருமக்களையும் வாழ்த்தும் நல் இதயம் கொண்ட இந்த மாமனிதருக்கு இலக்கிய மற்றும் தமிழ் தொண்டை பாராட்டும் விதமாக சேக்கிழார் ஆராய்ச்சி மையம், பொற்றாமரை அமைப்பு, பாரதியார் சங்கம், கம்பன் கழகம், திருவாவடுதுறை ஆதினம் மற்றும் சில அமைப்புகள் விருதுகள் வழங்கி கவுரவித்து உள்ளன.

அனைத்திற்கும் மேலாக தமிழ் அரசு செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவன துணைத் தலைவராக முனைவர் அவர்களை நியமித்து உள்ளது தமிழக வரலாற்றில் செம்மொழி தமிழாய்வு துறைக்கு நமது கார்குல முனைவர் துறை துணைதலைவர் ஆக நியமிக்கப்பட்டதும் பொறுப்பு ஏற்றுக்கொள்வதும் நமது கார்குலத்திற்கு பெருமையே.

தமிழன்னையின் கண்களில் வழிந்த அவலக் கண்ணீரை தமது எழுத்து வன்மையாலும் வலுவான இலக்கியச் சான்றுகளாலும் துடைத்தெறிந்தவர் நமது கார்குல பெரியவர் ரா. பி. சேது பிள்ளை அவர்கள் அந்த வரிசையில் இலக்கியத்தில் உள்ளே தொய்வுகளை களைந்தது புதிய அத்தியாயம் படைத்து கொண்டு இருக்கும் முனைவர் தெ. ஞான சுந்தரம் அவர்களுக்கு தமிழக அரசு இந்த விருதை அளித்து கவுரவித்து உள்ளது. தமிழுக்கும் நமது கார்குலத்தினருக்கு கிடைத்த பெருமையே மேலும் தங்க விரலுக்கு வைர மோதிரம் போட்டது போல் இந்த தமிழ் தென்றல் அண்ணாநகர் சங்கத்தின் ஆலோசகர் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அனைத்து தமிழ் அன்பர்களின் சார்பில் ஐயா அவர்கள் மேலும் பற்பல விருதுகள் பெறவும் தெளிந்த நீரோடை போல் பயணிக்கவும் தமிழன்னை அருள் புரியட்டும்.

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. 8248449204**க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும்* **கார்காத்தார் ஒப்புரவு,**
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*- கார்காத்தார் ஒப்புரவு*

## சிதம்பரம் பகுதி கார்காத்தார் சங்கங்களின்

# 21-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்.

நமது சங்கங்களின் சார்பாக **21**-வது மங்கல சந்திப்பு வருகின்ற **04.01.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை மணி **9.00 - 1.00** மணி வரை சிதம்பரம், கனகசபை நகர், காசி மடம் தெருவில் அமைந்துள்ள **ஸ்ரீ சிவகாமி அம்மை கலையரங்கத்தில்** நடைபெற உள்ளது. மணமகன், மணமகள் பதிவுகளை தாங்களே தங்களுடைய கைபேசி மூலம் கீழ்கண்ட முறையில் பிழையில்லாமல் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

## பதிவு செய்யும் வழிமுறைகள்

- **75985 22750 WhatsApp** நம்பருக்கு வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி லிங்கை பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- **https://forms.gle/ynES7ZVnLeM7gJ1UA** என்ற லிங்கில் சென்று பதிவு செய்து கொள்ளலாம்.
- இந்த **QR Code**-ஐ ஸ்கேன் செய்து லிங்கைப் பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- பதிவு ஒன்றுக்கு ரூபாய் **600/-**ஐ **G. Sivaraman G-Pay No : 75985 22750**-ல் செலுத்தவும்.
- பதிவுக்கான கடைசி தேதி - **25.12.2025**

- ❖ **ஆன்லைன் (Online) முறையில் மட்டுமே பதிவுகள் செய்ய இயலும்.**
- ❖ **நேரிலோ மற்றும் தபால் மூலமாகவோ பதிவுகள் செய்ய இயலாது.**
- ❖ **தாங்கள் பதிவு செய்யும் விபரங்கள் நேரடியாக பிரிண்டிங் செல்வதால் தாங்கள் மிக கவனமுடன், சரியாக பிழையில்லாமல் பதிவு செய்யவும்.**

இந்த முறையில் பதிவு செய்து முடித்தவுடன் தாங்கள் குறிப்பிடும் **Email** முகவரிக்கு பதிவு செய்த விபரங்கள் **(Acknowledgement)** உடனே வந்து சேரும். தங்களுக்கான பதிவு எண் கைபேசி மூலம் தெரிவிக்கப்படும்.

தனிப்பிரதி வேண்டுவோர் மட்டும் கீழ்கண்ட முகவரியில் பதிவு செய்து கொள்ளவும். தபாலில் பெறுவதற்கு ஏற்படும் கால தாமதங்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்பு முகவரி :
**G. சிவராமன் பிள்ளை**
49, லால்கான் தெரு, **சிதம்பரம்.**
**Cell: 97870 68062**

இப்படிக்கு,
**மங்கல சந்திப்பு பணிக்குழு,**
**சிதம்பரம் பகுதி.**

## மாதிரி விண்ணப்பம்

(கீழ்கண்ட தகவல்கள் மட்டும் (Online) பதிவு செய்ய போதுமானது)

| | |
|---|---|
| Email | |
| மணமகள் / மணமகன் பெயர் | |
| பாலினம் (ஆண் / பெண்) | |
| பிறந்த தேதி | |
| உயரம் (சென்டி மீட்டர்) | |
| நட்சத்திரம் | |
| கோத்திரம் | |
| நிறம் | |
| கல்வி தகுதி | |
| பணி விபரம் | |
| ஊதியம் | |
| தந்தை பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| தாயார் பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| உடன் பிறந்தோர் (ஆண்/பெண்) | |
| விருப்பம் & இதர தகவல்கள் | |
| தபால் முகவரி & பின்கோடு | |
| தொடர்பு எண் – I | |
| தொடர்பு எண் – II (WhatsApp) | |
| புத்தகத்தை தபாலில் பெற விருப்பமா? ஆம்/ இல்லை | |
| G-Pay - Name & Transaction No. & Date | |

# இந்தியாவில் வரி வகைகள்

பகுதி 2

மேலையூர் ச. அன்பழகன், 98413 73184

நம்முடைய இந்திய நாட்டில் உள்ள 10 வகை வரி களைப் பற்றி இக்கட்டுரை யின் முதல் பகுதியில் பார்த் தோம். இந்த இரண்டாம் பகுதியில் மீதமுள்ள 15 வகை வரிகளைப் பற்றிப் பார்ப்போம்.

**11 கொட்டுதலுக்கு எதிரான வரி - Anti Dumping Duty**

என்ன கொட்டுதலுக்கு எதிராகக் கூட வரியா என்று குழப்பமடைய வேண்டாம் ஆன்டி டம்பிங் என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு அவ்வாறு உள்ளது சரி ஆங்கிலத்தில் உள்ள டம்பிங் DUMPING என்றால் என்ன வென்று பார்த்தோமானால் ஒரு பொருளை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் போது அந்தப் பொருளின் உள் நாட்டு விலையை விடக் குறைவான விலைக்கு வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதை டம்பிங் என்று சொல்வார்கள் அவ்வாறு உள் நாட்டு விலையை விடக் குறைவாக வெளி நாட்டுக்கு அனுப்புவது மிகவும் தவறான வியாபாரம் ஆகும் அவ்வாறு செய்தால் உலகச் சந்தையில் நம்முடைய நிலை மிகவும் உருச் சிதைந்ததாகி விடும். அந்த தவறைச் சரி செய்ய அரசு அந்தமாதிரி யான டம்பிங்குக்கு எதிராக அந்த பொருளின் விலையின் அடிப்படையில் ஒரு வரியை விதிக்கிறது அதுவே கொட்டுதலுக்கு எதிரான வரி எனப்படும்.

**இதர வரிகள்**

**12. தொழில் வரி**

நீங்கள் ஏதேனும் தொழில் செய்து சம்பாதிப்பவராக இருந்தால் அந்த தொழிலுக்கான வரி செலுத்த வேண்டும். நாம் எங்கு தொழில் செய்கிறோமோ அந்த பகுதியின் நகராட்சி / மாநகராட்சி அந்த தொழில் வரியை வசூலிக்கும். இந்த வரி தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு ஊழியர் களும் செலுத்த வேண்டும். அந்த நிறுவனமே அந்த ஊழியரின் மாத சம்பளத்தில் அந்த தொழில் வரியை பிடித்தம் செய்து அந்த நகராட்சி / மாநகராட்சிக்குச் செலுத்தி விடும். வருமான வரியைப் போல் இதுவும் ஒரு சட்ட பூர்வ தேவையாகும் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் இந்த வரி வசூலிக்கப்படும். வரி விகிதம் மாநிலத்துக்கு மாநிலம் மாறு படக்கூடும்.

**13 ஈவுத்தொகை விநியோக வரி**

ஒரு நிறுவனம் தன் நிறுவனப் பங்கினை வாங்கியுள்ள பங்குதாரகளுக்கு அந்த நிறுவனத்துக்கு வரும் லாபத்தைப் பிரித்துக் கொடுப்பதே டிவிடெண்ட் என்னும் ஈவுத்தொகை யாகும். அவ்வாறு ஒரு நிறுவனம் தன் பங்குதார்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் தொகையின் அடிப்படையில் அரசு அந்த நிறுவனத்துக்கு விதிக்கும் வரியே ஈவுத் தொகை விநியோக வரி எனப்படும்.பெறும் ஈவுத் தொகைக்கு பங்குதாரர்கள் வரி செலுத்தத் தேவை இல்லை தற் போதய நிலவரப்படி ஈவுத்தொகை விநியோக வரி 15% ஆகும்.

**14. நகராட்சி வரி**

நகராட்சி வரி என்பது அந்த நகராட்சியின் எல்லைக்குள் உள்ள அசையா சொத்துக்களுக்கு அலுவலக கட்டிடம் வீடு, வீட்டு மனை போன்றவை அந்த நகராட்சி 6 மாதங்களுக்கு ஒரு முறை விதிக்கும் சொத்து வரியைத்தான் குறிக்கிறது. இந்த வரி வெவ்வேறு நகராட்சிகளுக்கு விகிதம் மாறக்கூடும்.

**15. பொழுது போக்கு வரி**

எல்லா வகையான பொழுது போக்கு அம்சங்களுக்கும் இது பொருந்தும். இதனை கேளிக்கை வரி என்றும் சொல்வார்கள் இந்த வரி அந்தந்த மாநிலங்களால் அவர்கள் மாநிலங்களில் நடை பெறும் சினிமா இதர கலை நிகழ்ச்சிகள் / ஒளி பரப்பு நிகழ்ச்சிகள் கேபிள் டீவீ போன்ற அனைத்து அம்சங்களில் வாங்கும் டிக்கட்டுகள் அல்லது அவற்றுக்கான விலைத் தொகை சம்பந்தப்பட்டது.

**16. முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம், மாற்றல் கட்டணம்**

நாம் ஒரு அசையா சொத்தினை வாங்கினால் அந்த சொத்துக்கான விலையுடன் அந்த கிரையத்துக்கான ஸ்டாம்ப் டூட்டி எனப்படும் முத்திரைத் தீர்வை, அதனைப் பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணம் மற்றும் அந்த சொத்தின் பட்டாவை நம் பெயருக்கு மாற்றுவதற்கு ஆகும் செலவு போன்ற செலவினங் களையும் ஏற்க வேண்டி இருக்கும். நம் பெயரில் சொத்து இருப்பதற்கு ஆதாரமாக சட்ட பூர்வ ஆவணங்கள் தயார் செய்ய இவை எல்லாம் தேவை அதாவது ஒரு நபரிடமிருந்து இன்னொரு நபருக்கு அசையா சொத்து மாற்றப்படும் போது சொத்தின் உரிமை மாறுவதால் இவை எல்லாம் தேவைப்படுகிறது. சொத்தின் மதிப்பு விலை இவற்றைப் பொறுத்து இச்செலவினங்கள் மாறு படும்.

**17. கல்வி வரி / கூடுதல் கட்டணம்**

மற்ற வரிகளிலிருந்து பிடித்தம் செய்யப்படும் கல்வி வரியிலிருந்து கிடைக்கும் நிதி இந்தியாவில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி

கொடுப்பதற்குப் பயன் படுத்தப்படுகிறது. மொத்த வரியில் 3 ம் கல்வி வரியாக எடுத்துக் கொள்ளப்படும். இது பெரும்பாலும், வருமான வரி, கலால் வரி மற்றும் சேவை வரிகளில் பிடிக்கப்படும் கூடுதல் கட்டணம் என்பது வரிக்கு மேல் கட்டப்படும் அதிகப்படி தொகை வரி எவ்வளவு என்பதைப், பொறுத்து கூடுதல் கட்டணம் மாறுபடும்.

**18. பரிசு வரி**

மற்றவர்கள் நமக்கு பணமாகக் கொடுக்காமல் பரிசுப் பொருளாகக் கொடுத்தாலும் அதுவும் ஒரு வகை வருமானமாகக் கருதப்பட்டு நம்முடைய ஆண்டு வருமானத்துடன் சேர்க்கப்படும் அதற்கும் நாம் வரி கட்ட வேண்டும், அதாவது அத்தகைய பரிசுப் பொருள்களின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ 50,000 மேல் அதிகரித்தால் வரி கட்ட வேண்டும் இந்த வரியே பரிசு வரி எனப்படும்.

**19. செல்வ வரி**

நம்முடைய நிகர செல்வங்களுக்கு விதிக்கப்படும் இந்த செல்வ வரி ஒரு நேரடி வரியாகும். அதாவது செல்வ வரி என்பது நம்மிடம் உள்ள செல்வங்களின் மதிப்பைக் கணக்கிடும் நாளில் உள்ள மதிப்பை பொறுத்தது. நிகர செல்வ வரி என்பது நம்மிடம் உள்ள எல்லா சொத்துக்களின் மதிப்பில் அவற்றை வாங்குவதற்கு நாம் வாங்கிய கடன் தொகைகளைக் கழித்து வரும் நிகர தொகையாகும். செல்வ வரி என்பது அவற்றின் மதிப்பு ரூ 30 லட்சத்துக்கு மேல் இருந்தால் வசூலிக்கப்படும் அந்த ரூ 30, லட்சத்துக்கு மேற்பட்ட தொகைக்கு 1 சதவீதம் செல்வ வரி வசூலிக்கப்படும். அதாவது நீங்கள் பணமாக வைத்திருந்தாலும் சொத்தாக வைத்திருந்தாலும் செல்வ வரி கட்ட வேண்டும்.

குறிப்பு :– 2015 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் இந்த செல்வ வரி ரத்து செய்யப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக !! தற்போது ஒரு கோடிக்கு மேல் வருமானம் ஈட்டும் ஒவ்வொருவரும் அதில் 12%ம் கூடுதல் வரியாகச் செலுத்த வேண்டும்.

**20 சுங்கச் சாவடி வரி – Toll Tax**

நெடுஞ்சாலைகளில் சில இடங்களில் நாம் வாகனங்களில் சென்றால் நாம் வரி செலுத்த வேண்டி இருக்கும் அதுவே டோல் சார்ஜ் எனப்படும் சுங்கச் சாவடி வரியாகும். அரசுக்கு செலுத்தப்படும் இந்த வரி அந்த சாலை போடுவதற்கு அதனைப் பராமரிப்பதற்கு போன்ற கட்டமைப்பு செலவுகளுக்குப் பயன் படுத்தப்படும். இது ஒரு சிறிய தொகையாக இருக்கும்.

**21 ஸ்வாச் பாரத் தீர்வை – தூய்மை இந்தியா வரி**

சமீபத்தில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வரி யாகும். இந்த வரி 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து எல்லா வரியுள்ள சேவைகளுக்கும் பொருந்தும் இந்த தீர்வை 0.5% ஆகும் இதனால் வரியுள்ள சேவைகளின் வரி 14.5% ஆக உயரும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பிரதமர் மோடியால் கொண்டு வரப்பட்ட சுத்தமான இந்தியாவுக்காக அதாவது சுகாதாரமான இந்தியாவுக்காக கிராமப் புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் கழிப்பறை இல்லாத இடங்களில் கழிப்பறை வசதி செய்ய மத்திய அரசு செலவு செய்யத் திட்டமிட்டுள்ளதை நாம் அறிவோம் அதற்கு இந்தத் தீர்வை யை பயன்படுதத்தக்கூடும்.

**22. க்ரிஷி கல்யாண் வரி விவசாயிகள் நலன் வரி**

2016 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள இந்த வரி 0.5% ஆகும் அதாவது வரி செலுத்தக் கூடிய சேவை வரியில் மேலும் 0.5 சேர்த்து வசூலித்து அந்த அதிகப்படி தொகையை விவசாயிகள் நலனுக்குச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது இந்த வரி 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து நடை முறைக்கு வந்துள்ளது அதனால் அந்த தேதியிலிருந்து வரி உள்ள சேவைகளின் சேவை வரி 15% ஆக உயர்ந்துள்ளது.

**23 ஈவுத் தொகை வரி**

இதே கட்டுரையின் 12 ஆவது வரியாக நாம் பார்த்தது ஈவுத்தொகை விநியோக வரி. அது ஈவுத்தொகை வழங்கும் நிறுவனத்திடம் வசூலிக்கப்படும் வரி இது ஈவுத்தொகை பெறும் அதன் பங்குதாரர்களாகிய மக்களிடம் வசூலிக்கும் வரி 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ள இந்த வரி விதிப்பின்படி ரூ 10 லட்சத்துக்கும் அதிகமான வருமானம் உள்ளவர்கள் இந்த வகை ஈவுத்தொகை வருமானத்தில் 10% ம் கூடுதல் வரி செலுத்த வேண்டி வரும்.

**24. உள் கட்டமைப்பு தீர்வை**

2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக விதிக்கப்பட்டுள்ள இந்த வரி கார் போன்ற பயன்பாட்டுக்கு உள்ள வாகனங்கள் மற்றும் பெட் ரோல் சமையல் எரி வாயு CNG வாகனங்கள் அதாவது 4 மீட்டர் நீளம் மற்றும் 1200 CC க்கு மிகாத வாகனங்கள் ஆகியவைகளுக்கு 2.5 தீர்வையும் 4 மீட்டர் நீளம் மற்றும் 1500 CCக்கு க்கு அதிகமும் உள்ள வற்றுக்கு 4 தீர்வையும் வசூலிக்கப்படும்.

**25 . நுழைவு வரி**

குஜராத், மத்தியபிரதேசம், அஸ்ஸாம், டெல்லி மற்றும் உத்தரகாண்ட் போன்ற மாநிலங்கள் தங்கள் மாநில எல்லைக்குள் நுழையும் அனைத்துப் பொருட்களுக்கும் 5.5 லிருந்து 10% வரையிலான நுழைவு வரி வசூலிக்கின்றன.

**இந்தியாவில் வரி**

ஒருவர் இந்தியக் குடிமகனாக இருந்தாலும் அல்லது வெளி நாடு வாழ் இந்தியராக இருந்தாலும் அவர் இந்தியாவில் ஈட்டும் வருமானத்துக்கு இந்தியாவில் வரி கட்ட வேண்டும்

**இந்தியருக்கு வரி**

இந்திய வருமான வரிச் சட்டங்களின் படி இந்தியக் குடிமகனாக உள்ள ஒருவர் உலகின் எந்த பகுதியில் வருமானம் ஈட்டினாலும் அதற்கு இந்தியாவில் வரி செலுத்தியாக வேண்டும்

BE INDIAN

BUY INDIAN

EARN ANYWHERE

TAX IN INDIA

மணி எக்ஸெல். காம் இணையதளத்திலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

## ஃலைப் ஸ்டைல் பாதிப்புகள், காரணமும், தீர்வும்....

இன்றைய கால சூழலில் உணவு முறை, வாழ்க்கை முறை என எல்லாமே நவீன மயமாகிவிட்டது. அதற்கு தகுந்தாற்போல் உடல் உபாதைகளும் மாறிவிட்டது. அந்த வகையில் கடந்த 20 ஆண்டுகளைவிட தற்போது பல மடங்கு உடல் நல பிரச்சனைகள் அதிகரித்து காணப்படுவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றது. உதாரணமாக, அம்மாவின் உணவு ஊட்டல் முடிந்து தாங்களாகவே உணவை உண்ண தொடங்கிய பருவத்திலிருந்தே பாதிப்புகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

5 வயது முதல் 70 வயது வரை பலவித உடல் நல குறைவுகளை சந்திக்க தொடங்கியுள்ளனர். இதற்கு முழுக்க முழுக்க காரணம் நமது இன்றைய உணவு கலாச்சாரமும், வாழ்க்கை முறை மாற்றங்களும் தான்.

அந்த வகையில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சந்திக்கும் பெரிய பிரச்சனை என்றால் அது உடல் பருமன் தான். அதிலும், குழந்தைகள் பலரும் உடல்பருமன் காரணமாக, மன அழுத்தத்திற்கு ஆளாவதை சமீபமாக பார்க்க முடிகிறது. உடல் பருமனுக்கு உணவு பழக்கமும், மன அழுத்தத்துக்கு செல்போன் உபயோகமும் தான் முக்கிய காரணமாக இருக்கிறது. அடுத்து, 15–25 வயதில் உள்ளவர்கள் பலரும், சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் போன்ற பல பிரச்சனைகளுக்கு ஆளாகின்றனர். இதைத் தவிர மன அழுத்தத்துக்கும் ஆளாகி வருகின்றனர். இதற்கும், சோஷியல் மீடியா அடிக்ஷன், ஃபாஸ்ட்ஃபுட் உணவுப் பழக்கம் என பல விஷயங்கள் காரணமாகின்றன.

இதில், இளம் வயதினர் அதிகமாக சந்திப்பது சர்க்கரை நோய் பிரச்சனைதான். இது குறித்த சமீபத்திய ஆய்வுகளை பார்க்கும் போது, உலகளவில் இளம் வயது சர்க்கரை நோயாளிகளில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

இதே நிலையில் தொடர்ந்தால், அடுத்த 2030 க்குள் இந்தியா முதலிடத்தில் வந்து விடும் எனவும் கணித்துள்ளனர். அதற்கு அடுத்த நிலையில், 25 முதல் 40 வயதினர் சந்திக்கும் பிரச்சனைகள் என்றால், சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு மற்றும் அதிக கொழுப்பு, புற்றுநோய் போன்ற பாதிப்புகளும் ஆகும்.

இவை எல்லாவற்றுக்கும் காரணம், இப்போதுள்ள வாழ்க்கை முறை மாற்றங்கள்தான். இன்று பெரும்பாலான இளைஞர்களின் வேலை நேரங்கள் மாறிவிட்டது. இதனால், தூக்க நேரம் மாறிவிட்டது. இரவில் விழித்திருந்து பகலில் தூங்குகின்றனர். சிலர் ஒரு வாரம் இரவு, ஒரு வாரம் பகல் என்று வேலை செய்கின்றனர். இதனால், தூக்கம் சமநிலை அற்று போகிறது. இதன் காரணமாக, ஸ்ட்ரெஸ் லெவல் அதிகரிக்கிறது. இதனால், மன அழுத்தத்துக்கு தள்ளப்படுகின்றனர்.

அதுபோன்று, உணவுப்பழக்கம் மாறிவிட்டது. நேரங்கெட்ட நேரத்தில் உணவு உண்பது; இரவு வெகு நேரம் கழித்து உணவு உண்பது; காலை உணவைத் தவிர்ப்பது; ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்வது; பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பது போன்றவை உடலில் பலவித உபாதைகளை

ஏற்படுத்துகிறது. இன்று அதிகளவில் உடல் பருமன் ஏற்படவும் இதுவே காரணமாகிறது.

முந்தைய காலங்களில் ஒரு பெற்றோருக்கு குறைந்தபட்சம் 4–6 குழந்தைகள் வரை இருந்தார்கள். அதனால் அவர்களுக்கு கிடைக்கும் உணவுகளை பகிர்ந்து கொடுத்தார்கள். ஆனால் இன்று அப்படியில்லை. இருப்பதே ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் தான். அதனால், அவர்கள் குழந்தைகளுக்கு உணவுகளை ஊட்டி ஊட்டி திணிக்கின்றனர். மேலும் தற்போது ஆர்டர் செய்தால் வீட்டிற்கே உணவுகள் வந்துவிடுகின்றன. இதனால் வேண்டிய உணவுகளை வீட்டிலிருந்தபடியே ஆர்டர் செய்து சாப்பிடும் பழக்கமும் ஒரு காரணமாகிறது. மேலும், ஆரோக்கியமற்ற பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பதும் ஒரு காரணமாக உள்ளது.

அது போன்று, உடல் உழைப்பு என்பது சிறியவர் முதல் பெரியவர் வரை குறைந்து போனதும் ஒரு காரணம். தேவைக்கு அதிகமான உணவு, குறைந்த உடல் உழைப்பு. இதனால் உடல் பருமன், மன அழுத்தம் போன்றவை அதிகரித்துள்ளது. அது போன்று குழந்தைகளுக்கு சுதந்திரமாக, காற்றோட்டமாக விளையாடும் வாய்ப்பு தற்போது கிடையாது. இதனால், குழந்தைகளிடம் மூட் சேஞ்சஸ் ஏற்படுவதையும் சமீபகாலமாக பார்த்து வருகிறோம். இதற்கு, சோஷியல் மீடியாக்களில் குழந்தைகள் மூழ்கி விடுவதும் ஒரு காரணம். பொதுவாக, உடல் பருமன் அதிகரிக்க, அதிகரிக்க மூளை வளர்ச்சி குறைகிறது. இதனால் மன அழுத்தத்துக்கான ஹார்மோன் அதிகமாக சுரந்து, மன அழுத்தம் ஏற்படுகிறது.

தீர்வுகள் :

குழந்தைகளுக்கு ஏற்படுகிற உபாதைகளுக்கு, வீட்டில் இருந்துதான் மாற்றம் வர வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அவர்களுக்கு ஆரோக்கியமான உணவு பழக்கத்தை ஏற்படுத்தி தர வேண்டும். கேட்ஜெட் பயன்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். வெளி உணவுகளை சாப்பிடும் பழக்கத்தை குழந்தைகளிடம் தவிர்க்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.

இதில் இன்னொரு விஷயமும் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால், எவ்வளவு உணவுகளை சாப்பிட்டாலும், என்ன உணவுகளை சாப்பிட்டாலும் குழந்தைகள் நன்கு ஓடியாடி விளையாடும் போது, அவை அவர்களுக்கு செரிமானம் ஆகிவிடுகிறது. இதனால், உடல் பருமன் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. அவர்களின் செல்போன் பயன்பாடும் குறைகிறது. இதனால், குழந்தைகளை ஏதாவது ஒரு விளையாட்டில் கட்டாயம் ஈடுபடுத்த வேண்டும்.

இதைச் செய்தாலே, ஓரளவுக்கு குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்க முடியும். குழந்தைகளின் படிப்புக்கு மட்டுமே செலவு செய்வது என்பது பெற்றோரின் பொறுப்பு அல்ல. மற்ற விஷயங்களிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அடுத்து டீன்–ஏஜ் பருவ வயதினரின் பிரச்சனைகள் என்று எடுத்துக் கொண்டால், பெற்றோருக்கு பொறுப்புகள் இன்னும் கூடுதல் ஆகிறது. இந்த வயதில், அவர்களுக்கு உணவு பழக்கம் மற்றும் மற்ற அனைத்து பழக்க வழக்கங்களுக்கும் சரியான புரிதலை ஏற்படுத்தி தரவேண்டும்.

மற்ற வயதினரும் இதுபோன்ற ஆரோக்கியமற்ற பழக்கங்களை தவிர்த்து விட வேண்டும். ஆரோக்கியமான உணவு பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். தினசரி உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இதில் அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்கியமற்ற, பதப்படுத்தப்பட் உணவுகள் போன்றவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மார்க்கெட்டில் கிடைக்கும் உணவுப் பொருட்களின் மூலப் பொருட்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பள்ளி, கல்வி கூடங்களில் குழந்தைகளுக்கு உடல் உழைப்புக்கான பயிற்சி வகுப்புகளை கூடுதல் படுத்த வேண்டும். சோஷியல் மீடியாக்களில் மூழ்கிக் கிடக்காமல், தங்கள் கவனங்களை நல்ல விஷயங்களில் செலவிட வேண்டும். இந்த உண்மைகளை உணர்ந்து, நமது வாழ்க்கை முறைகளில் சிறிய மாற்றங்களைச் செய்வதன் மூலம், நாள்பட்ட நோய்களைத் தடுத்து, நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90.
செல் : 9943702054

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி P. கார்த்திகா |
| படிப்பு | B.Com., LLB |
| பிறந்த தேதி | 27.05.1997 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | கொழுமுஷ்ட |
| தகப்பனார் | T.G. பசுபதி, B.Com., B.G.L., நெல், அரிசி மொத்த வியாபாரம் |
| தாயார் | P. வினோதினி, இல்லத்தரசி |
| முகவரி | 43, வாணக்காரத் தெரு, மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர் - 613 001. Cell : 93843 44298 / 94435 68569 |



| | |
|---|---|
| பெயர் | செல்வி R. அபிநயா |
| படிப்பு | B.Sc., MCA., |
| வேலை | Ex - Sutherland, Pursuing new Career path |
| பிறந்த தேதி | 15.12.2000 |
| உயரம் | 152 cm |
| நட்சத்திரம் | ஆயில்யம் (4 ஆம் பாதம்) |
| கோத்திரம் | வங்காரமுட |
| பூர்வீகம் | தலைச்சங்காடு, மயிலாடுதுறை |
| தகப்பனார் | S. ராமதாஸ், (Late) |
| தாயார் | R. சந்திரா, இல்லத்தரசி (திருவாலங்காடு, மயிலாடுதுறை) |
| முகவரி | 1/4, வெள்ளாளர் தெரு, தலைச்சங்காடு, தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை - 609 107. Cell : 98941 83648 / 90426 72827 E-mail : arulselvan.m1983@gmail.com |
| விருப்பம் | நல்ல பணியில் உள்ள வரன் |





## வாழ்த்துகிறோம்

தருமை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ 27ஆவது
குரு மகா சந்நிதானத்தின் மணி விழாவில்
மக்கள் மருத்துவர் குலம் போற்றும் மாணிக்கம்
வைரம் பல் நோக்கு மருத்துவமனை தலைவர்

மருத்துவர் **இரா.ராஜசேகரன்**

அவர்களுக்கு **மருத்துவ கலைச்செல்வர்**
விருது வழங்கி சிறப்பிக்கபட்டது. அவர்
நீடுழி வாழ இறை அருளும் தருமை ஆதீன
குருவருளும் வேண்டுகிறோம்

**மரு.இரா.சித்தார்த் - சி.கீர்த்தி**
**ப. கிருத்தியா, இரா. ஸ்ரீ நிகேதன், இ.தஸ்வந்த்**
**சி. நியதி, இ.சன்மித்ரா, சி. பிரணவி (எ) சிவசக்தி**
இவர்களுடன்... **மு.ஜெயந்தன் - ஜெ.தேசிகா**

## சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கம் - புதிய பொறுப்பாளர்கள் அறிமுக விழா
























# வாழ்க மணமக்கள்





கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், முடிகண்டநல்லூர் திரமுட கோத்திரம் கோ. கணேசன் பிள்ளை – ஜெயலெட்சுமி ஆச்சி மகன் வழிப்பேத்தியும் பெண்ணாடம் (மைசூர்) சு. இரத்தினம் பிள்ளை – வைரம் ஆச்சி மகள் வழிப்பேத்தியும் க. இரமேஷ்கண்ணா – சாந்தி மகளுமான திருவளர்செல்வி **இர. திவ்யதர்ஷினி**, B.E., CTS கோயம்புத்தூர், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கோவிந்தபுரம் தென்னவராய கோத்திரம் தெய்வத்திருவாளர்கள். ரா. ராதாகிருஷ்ணன் பிள்ளை – சரோஜா ஆச்சி மகன் வழிப்பேரனும் விளாங்குடி து. பாரி பிள்ளை – விஜயகுமாரி ஆச்சி மகள் வழிப்பேரனும் – ரா. சண்முகசுந்தரம் – புவனேஸ்வரி மகனுமான திருவளர் செல்வன். **ச. ராஜாராம்**, B.E., CTS கோயம்புத்தூர், இவர்களது திருமணம் 26–10–2025 ஞாயிற்றுக்கிழமை அரியலூர் கீதா மஹாலில் நடைபெற்ற திருமணத்திற்கு வருகை தந்து வாழ்த்திய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**ரா. சண்முகசுந்தரம்**
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிட்.,
**புவனேஸ்வரி சண்முகசுந்தரம்**
கோவிந்தபுரம்
செல் - 97159 65525

**க. இரமேஷ்கண்ணா**
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிட், ஆலத்தியூர்
**சாந்தி இரமேஷ்கண்ணா**
**Er. இர. தரணிசெல்வன்,** B.Tech., (IT)
CTS - சென்னை.
அரியலூர். செல் :9715265306
**S. இரத்தினம்** – மைசூர்

## குறை காணும் மனிதர்கள் (CYNICS)

Dr. D. Kalyanakumar, Trichy-18. 94437 97972

இவ்வுலகில் எதற்கெடுத்தாலும் குறைகாணும் மனிதர்கள் ஏராளம் நாமும் இதற்கு விதிவிலக்கல்ல. மனிதர்களிடம் இருக்கும் இந்த நோய்க்கு மிக முக்கியமான காரணம். தன்னை நேர்மையாளர்கள் போலும் அடுத்தவரைக் குற்றவாளிகள் போலும் பார்க்கின்ற மனநிலைதான். நம்மைப்பற்றிய அரை குறையான கண்ணோட்டம். அடுத்தவரைப்பற்றிய அவசரக் கண்ணோட்டம் என்ற இரண்டும் கலந்த பார்வைக் கோளாறு தான் இது. பிறரிடம் காணப்படும் சிறு தவறுகளை மிகைப்படுத்திக் காணப்படும் சிறு தவறுகளை மிகைப்படுத்திக் காணும் நம் கண்கள். நம் தவறுகளையும் நம்முள் உறைந்து கிடக்கும் குற்றங்களையும் பார்க்கத் தவறிவிடுகிறது. நம் கண்கள் தெளிவாக இருந்தால் தான் நம் பார்வையும் தெளிவாக இருக்கும். கண்ணில் ஒரு சிறிய தூசி விழுந்தால் கூட கண் தானாகவே மூடிக்கொள்ளும். அப்போது நம் பார்வையும் தெளிவு குன்றிவிடும். நமது பார்வை தெளிவாக இருக்க வேண்டும் என்றால் நம் கண் தெளிவாக இருக்க வேண்டும். ''குறைகள் இருப்பின் எங்களிடம் சொல்லுங்கள். நிறைகள் இருப்பின் மற்றவர்களிடம் சொல்லுங்கள்'' என்பது ஒரு வியாபார பொன்மொழி ஒருவரிடத்தில் குறைகள் காணப்பட்டால், அவர் தனித்திருக்கையில் அவருக்குப் பக்குவமாக எடுத்துரைப்பதே சிறப்பு. மாறாக அவர் அந்த இடத்தில் இல்லாத போது, எதிர்மறையாக, உண்மைக்கு மாறாக இழிவாகத் திரித்து, வேண்டுமெனவே கூறுதல் பெரும் குற்றமாகும். இதனால் உறவு பாதிக்கப்படும்.

''குணம்ந.ாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''.

ஒருவரின் குணங்களைவும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

நாம் மற்றவரைப் பற்றி நல்ல செய்திகளைச் சொல்ல விரும்பும்போது, அதைப் பிறர் முன்னிலையில் தைரியமாகச் சொல்லலாம். அதை விடுத்து மறைவாக, பிறரைப் பற்றி நாம் பேசுகிறோமெனில் கண்டிப்பாக அது பிறரைப் பற்றிய அவதூறாகவும், பழிப்புரையாகவும் தான் இருக்க வேண்டும். எந்த ஒரு குறையையும் மற்றவர்களிடம் காணும் முன்பு நம்மைக் குறித்து ஆய்வு செய்து பார்ப்போம். ஏனெனில் மற்றவர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தி பழித்துரைப்பது மூன்று நபர்களைப் பாதிக்கிறது என்பர். முதலாவதாக அயலாரை மறைவாகப் பழித்துரைப்பவர் பாதிக்கப்படுகிறார். இரண்டாவதாக அவ்வாறு சொல்லப்படும் பழிப்புரையை தன் செவிகளின் வழியாக உள்வாங்குபவர். இறுதியாக யாரைப் பற்றி பழிப்புரைச் சொல்லப்படுகிறதோ அந்த நபர். இவ்வாறு மூன்று நபர்களுக்குமே தீமையாக அமைகிறது ஏன் சிலர் மற்றவர்களின் குறைகளைப் பெரிதுபடுத்துவதிலேயே குறியாய் இருக்கின்றனர் என்பதை யோசித்துப் பார்த்திருக்கின்றோமா ? பலருக்குத் தங்களுடைய தவறுகள் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம். அதனால்தான் அவர்கள் அடுத்தவரிடம் இருக்கின்ற சிறு சிறு குறைகளை அல்லது அடுத்தவர் செய்கின்ற சிறு சிறு தவறுகளைப் பெரிதுபடுத்துகிறார்கள். இரண்டு மனிதர்களுக்கிடையே பிரச்சினை வெடிக்கின்றபோது இதனை நன்றாகக் காணலாம். ஒருவர் தன்னுடைய தவறு வெளியே வந்துவிடக்கூடாது என்பதற்காக அடுத்தவர் செய்த தவறைப் புட்டுப்புட்டு வைப்பார். இவ்வாறே மாறி மாறி நடக்கும்.

உயர்ந்த எண்ணங்களுடனும், அடுத்தவரைப் பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளுடனும் திகழ்பவர்கள், எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பர். எதிர்மறையான சிந்தனை ஏற்படும்போது நம்மையும் அறியாமல் துயரம் நம் தோளில் அமர்ந்துகொள்ளும். இன்றைக்கு இளைஞர்களின் ஆற்றல் முழுமையாகப் பயன்படாமல் போவதற்கு அவர்களது எதிர்மறைச் சிந்தனைகளே காரணம் அனைத்தையும் விமர்சனக் கண்ணோட்டத்துடனும், குதர்க்கத்துடனும் பார்க்கும் மனப்பான்மை, ஆக்க சக்தியை அடியோடு உறிஞ்சிவிடும். 'சினிக்' என்ற சொல். எதையும் குறை சொல்பவர்களைக் குறிக்கும். 'சினிக்' என்பது நாயைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லிலிருந்து உருவான சொல். நாய் எப்போதும் குரைத்துக் கொண்டு இருப்பதைப் போல, மற்றவர்களைக் குறை சொல்வதே சிலரின் குணம் என்பதால்

அவர்களை 'சினிக்' என்று அழைப்பது உண்டு. குரைப்பதும், குறை சொல்வதும் ஒரே மனநிலை. எப்போதும் நல்லவற்றைப் புறந்தள்ளி அல்லவற்றை உயர்த்திப் பிடிக்கும் மனிதர்களைச் சமூகம் என்றுமே நேசித்ததில்லை எந்தச் செய்தியையும் முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல் நுனிப்புல் மேய்பவர்கள், தனக்கு எல்லாமே தெரிந்தது போல் விமர்சனம் செய்வது இன்றைய நிகழ்வு.

மற்றொருவரிடம் எதை குற்றமென்று பார்க்கின்றோமோ, அதுவே நம்முடைய வாழ்வில் ஏற்பட்டால் சோதனை என்று அழைக்கின்றோம் என்று எமர்சன் என்ற தத்துவ அறிஞர் கூறியுள்ளார். நியூட்டனின் மூன்றாம் இயக்கவிதியின் அடிப்படையில் இவ்வுலகில் ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் காணப்படுகிறது. இந்த விதி விசைக்கு மாத்திரமன்றி நமது செயல்களுக்கும் பொருந்தும். எப்போது நமது சுட்டுவிரல் ஒருவனை காட்டிக்கொடுக்க முற்படுகிறதோ அப்போது நம் கையில் ஏனைய மூன்று விரல்களும் நம்மை சுட்டிக்காட்டுகின்றன.

உலகில் இருவகை மனிதர்கள் உண்டு குறையில் நிறை காணும் வகை. மற்றும் நிறையில் குறை காணும் வகை. இந்த இரண்டு வகை மனிதர்களில் நீங்கள் எந்த வகை ?

---

## கதை எப்படி? கதையின் முடிவெப்படி?

14–12–2025 ஞாயிறு அன்று தினமலரில் (திருச்சி பதிப்பு) எனது முதல் சிறுகதை போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாக உள்ளது. ஆண்டுதோறும் "தினமலர்" நடத்தும் "டிவிஆர்" நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசுக்குத் (ரூ. 2.500) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தலைப்பு : "பொய்யில் உயிர் வளர்த்தேன்"

கதை உண்மை நிகழ்வின் அடிப்படையில் கற்பனை கலந்து எழுதப்பட்டுள்ளது.

கதையின் முதற்பகுதி சுருக்கம்.

சென்னையில் இருக்கும் 'சிவா' பாலுவின் நீண்ட கால நண்பன். சிவா உடல் நிலை சரியின்றி 'டயாலிசிஸ்' செய்து கொண்டு வருகிறான்.

அவனுக்கு ஆறுதலாக பாலு அடிக்கடி பேசிக் கொண்டே இருப்பான். நாற்பது ஐம்பது வயதுக்கு மேல் நிறைய பேர் பிரஷர் சுகர் என்று தானே மாத்திரையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென சிவாவின் மன பாரத்தைக் குறைத்துக் கொண்டிருப்பான்.

"நீ தானே அலுத்துக்குற சிவா; இங்கே எங்க ஊர்ல எனது உறவுக்காரப் பெண்மணி ஏழெட்டு வருஷமா டயாலிசிஸ் செஞ்சுகிட்டு நல்லாதான் இருக்காங்க" என்று பாலு பேசிய அந்த உரையாடலில் 'அந்த ஏழெட்டு வருஷமே' சிவாவின் நெஞ்சைக் குளிர வைத்து ஆயுளை நீட்டியது.

நாட்கள் உருண்டோட, சிவா ஒரு திருமணத்திற்காக பாலுவின் ஊருக்கு வர நேர்கிறது. திருமணத்திற்கு வருவதை விட பாலுவின் அந்த உறவுக்கார 'டயாலிசிஸ்' பெண்மணியைச் சந்தித்துப் பேசி ஆறுதல் அடையவே சிவா காத்திருந்தான்.

சொன்னபடி 'சிவா' திருமணத்திற்காக வந்து இறங்கியவுடன் அந்த 'டயாலிசிஸ்' பெண்மணியைப் பார்க்க வேண்டி பாலுவை வரச் சொல்லி இருவரும் காரில் புறப்பட்டுச் செல்கின்றனர்.

செல்லும் போது பாலு தன் மனைவிக்கு போன் செய்து சிவாவுடன் சென்று கொண்டிருப்பதைச் சொல்லிவிட்டு அந்தப் பெண்மணிக்கு தாங்கள் வருவதை முன்கூட்டியே போன் செய்து சொல்ல வேண்டுகிறான்.

இதைக் கேட்ட பாலுவின் மனைவிக்கு 'பகீர்' என்றது கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை.

பாலுவின் மனைவி ஏன் பதற்றமானாள் ?

கதை எப்படி ? கதையின் முடிவெப்படி என்பதை நாளைய (14–12–2025) தினமலரில் (திருச்சி பதிப்பு) படித்துத் தெரிந்து கொள்ள ஆவலுடன் கேட்டுக்கொள்கிறேன்.

('திருச்சி பதிப்பு' என்பதால் அனைவரும் படிக்க இயலாததை பொறுத்தருள வேண்டுகிறேன்)

– நன்றியுடன்

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.

**9578286891**

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர் :** ஆண்டாள், மீரா, கௌரி, சித்ரா, கோமதி, வசுமதி, மீனா, தீபிலி, பிரியா.

**இடம் :** R.K. நகர், மந்தவெளி, திருமதி. ஆண்டாள் அவர்களின் இல்லம்.

தோழிகள் அனைவரும் மாலை 5 மணி அளவில் கூடவும், அந்த இடம் களைகட்டுகிறது.

ஆண்டாள் : வாங்க ! வாங்க ! நீங்க எல்லாரும் எங்கள் வீட்டிற்கு வந்தது ரொம்ப சந்தோஷம். காபி குடித்து விட்டு கச்சேரியை ஆரம்பிப்போமென கூறவும், ஒருமித்த குரலில் அனைவரும் இப்ப வேண்டாம்க்கா ! போகும் போது குடித்துக் கொள்கிறோம் என்றனர்.

மீரா : இப்பதான் வீட்டில் குடிச்சுட்டு வரோம்! நம் அரட்டையை பகவான் சத்யசாய் நூற்றாண்டு விழா மட்டுமல்ல; அவரது போதனைகள், சிந்தனைகள் அனைத்தையும் பற்றி பேசி ஆரம்பிக்கலாம்பா !

தீபிகா : கரெக்ட் தான்க்கா !நம்மகுழுவிலேயே அவரது பக்தைகள் இருக்கோம். நாங்க சொல்றோம்க்கா ! அவர் நவம்பர் 23, 1926–ல் புட்டபர்த்தியில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே ஆன்மீக நாட்டம் கொண்டிருந்த அவர், புக்க பட்டணத்தில் பள்ளியில் படிக்கும் போதே சிறு சிறு சித்து விளையாடல்களை நடத்தினார். அவரது தாயார், ஈஸ்வராம்பா, கல்வி, குடிநீர், மருத்துவ வசதியின்றி தவிக்கும் மக்களுக்கு அடிப்படை தேவைகளை வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

பிரியா : சென்னையின் குடிநீர் தேவைக்கும் தீர்வு கண்டவர் மேலும் பல்கலைக்கழகம் மற்றும் ஏழைகளுக்கான இலவச மருத்துவ மனைகள் சத்யசாய் டிரஸ்ட் நடத்தி வருகிறது. புட்டபர்த்தியிலும், பெங்களூருக்கு அருகில் ஒயிட்ஃபீல்டு எனும் இடத்திலும் உள்ள மருத்துவமனைகளில் அனைத்து மருத்துவ வசதிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவரது பல்கலைக் கழகத்தில் மனிதநேய மேம்பாட்டுக்கான கல்வி, ஆராய்ச்சி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி போன்ற பிரிவுகளில் இளங்கலை, முதுகலை கல்வி வழங்கப்படுகிறது. அநேக இடங்களில் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இவைகளின் முக்கிய நோக்கம் மனித நேயத்தை வளர்ப்பது, சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்பது, மற்றும் அறிவைப் பரப்புவதாகும்.

தீபிகா : குழந்தைகளின் ஆளுமைத் தன்மையை வளர்க்க, பகவான் பாலவிகாஸ் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தினார். உலகெங்கும் 1200–க்கு மேற்பட்ட சமிதி எனப்படும் சமூக அமைப்புகளும், அதன் மூலம் குழந்தைகளுக்கான பாலவிகாஸ் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பெண் ஆசிரியைகள் மூலம் கதைகள், பாடல்கள், நாடகங்கள் மட்டுமன்றி ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, மற்ற பிற மதங்களில் இருந்தும் கதைகள் நீதிகள் போதிக்கப்படுகின்றன.

சித்ரா : அதன் மூலம் இன்றைய குழந்தைகள் நாளைய சமுதாயத்தில் வழிகாட்டிகள் ஆதலால் மனித மேம்பாடுகளான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய பண்பாடுகளைப் போதிக்க செய்தார். அகிம்சையை கடைப்பிடிப்பதன் மூலம் தீவிரவாதத்தை தடுக்க முடியும் என்றும், பேராசை ஒழியும் போது தானாகவே அகிம்சை ஏற்படும் என்றும் கூறினார்.

பிரியா : நற்செயல் என்ற விதையை விதைத்தால் நல்ல பழக்கமென்ற விளைச்சல் பெறலாம். நல்ல பழக்கத்தை விதைத்தால் நல்லொழுக்கம் என்ற விளைச்சல் பெறலாம். நல்லொழுக்கத்தை விதைத்தால் நல்ல விதி மூலம் நற்பேறு என்ற விளைச்சல் கிடைக்கும் என்றார்.

சித்ரா : அவரின் நூற்றாண்டு விழா நவம்பர் 13–ஆம் தேதியிலிருந்து நவம்பர் 24–ஆம் தேதி வரை புட்டபர்த்தியில் கொண்டாடப்பட்டது. நவம்பர் 19–ஆம் தேதி பாரதப்பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் 100 ரூபாய் நினைவு நாணயத்தினையும், தபால் தலையையும் வெளியிட்டார். குடியரசுத் தலைவர் நவம்பர் 22–ஆம் தேதியும், நமது துணை குடியரசுத் தலைவர் நவம்பர் 23–ஆம் தேதியும் கலந்து கொண்டு அவரின் அன்பு, சேவை, மனிதநேயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். நிறைய பேசிட்டோம். அடுத்த topic போகலாம்பா.

வசுமதி : நான் பேசப் போற விஷயம் பாலிவுட் நடிகர் தர்மேந்திராவின் மறைவு குறித்து தான். 89 வயதான அவர் நடிகை ஹேமாமாலினியின் கணவர். 1960–ல் தனது முதல் படமான 'தில் பி தேரா ஹம் பி தேரே' என்ற திரைப்படத்தின் மூலம் காலடி எடுத்து வைத்து 'ஷோலே' படத்தின் மூலம் மறக்க முடியாத நடிகரானார்.

60 ஆண்டுகளுக்கு மேலாக 300க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

கௌரி : அதுமட்டுமல்ல; ஹிந்தியில் அதிய ஹிட் படங்களைத் தந்த ஹீரோ என்ற சாதனையும் படைத்தவர்.

வசுமதி : இவர் கடைசியா நடிச்சிருக்கும் 'இக்கீஸ் படம் அடுத்த மாதம் திரைக்கு வர உள்ளது. அதைப் பார்க்காமலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

மீரா : எங்க பக்கத்து வீட்டு மாமா சொரியாசிஸ் எனும் நோயால் அவதிப்படுகிறார். பார்க்கவே பாவமா இருக்குப்பா. கை, காலெல்லாம் தோல் செதில் செதிலாக உரிந்து வருகிறது. குணப்படுத்த இயலாத நோய் இது. கட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கலாம். உலகம் முழுவதிலும் 12.5 கோடி மக்கள் இந்நோயால் அவதிப்படுகிறார்களாம். எந்த வகையான உணவு முறை இந்நோயைக் கட்டுக்குள் வைத்திருக்குமென ஆராய்ந்ததில், ஸ்பெயின் நாட்டின் ரமோன் ஒய் கஜல் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மத்தியதரைக்கடல் உணவு முறை உதவும் என கண்டறிந்துள்ளனர். அதாவது பழங்கள், காய்கறிகள், முழுதானியங்கள், பருப்பு வகைகள், ஆலிவ் எண்ணெய், கொட்டைகள் போன்றவைகளை முதன்மையாக கொண்ட உணவு முறை சிறந்தது. அசைவ உணவில் மீன் மட்டும் சேர்த்துக்கொள்ளலாம்.

வசுமதி : அக்கா! எனக்கு புரிஞ்சிடுச்சு! இந்த உணவு முறையில் பீட்டா கரோட்டின், வைட்டமின் C, வைட்டமின் E, பாலிபீனால் போன்றவைகள் உள்ளன.

மீரா : ஆமாம்! அவைதோலில்ஏற்படும் அழற்சியைக் கட்டுக்குள் வைத்திருக்கும் என கண்டறிந்துள்ளனர்.

கோமதி :இப்ப நாம் டெப்லிம்பிக்ஸ் (காது கோளாதோருக்கான ஒலிம்பிக்ஸ்) பற்றி பேசுவோம். நாம் இப்ப விளையாட்டுத்துறையில் முன்னேறி வரோம்கிறதுலே சந்தேகமே இல்லை. டோக்கியோவில் நடந்த 25 ஆவது சீசனில் இந்தியா சார்பில் 45 வீரர், 28 வீராங்கனைகள் பங்கேற்றனர். துப்பாக்கி சுடுதலில் அனுயா தங்கமும், பிரஞ்ஜலி வெள்ளியும் உட்பட இந்தியாவுக்கு 12 பதக்கங்கள் கிடைத்துள்ளன. மொத்தமாக இப்போட்டியில் இந்தியா 20 பாதக்கங்கள் வென்றுள்ளது. கோல்ப் போட்டியில் திக்ஷாதாகர் தங்கம் வென்றுள்ளார்.

மீனா : அது மட்டுமல்ல குத்துச் சண்டையில் இந்தியா ஆதிக்கம் செலுத்தி, 9 தங்கம் 6 வெள்ளி, 5 வெண்கலம் வென்றுள்ளது. ஐ.சி.சி. 50 ஓவர் பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்தியா முதன் முறையாக கோப்பை வென்று, அதைப் பிரதமரின் கையில் கொடுத்து, அவருடன் தலைமைப் பயிற்சியாளர் ஹர்மன் பிரீத்கவுர், ஷைபாலி வர்மா, ஸ்மிருதிமந்தனா,தீப்திஷர்மாசேர்ந்துமகிழ்ந்துள்ளனர். மகளிர் உலக கோப்பை கபடி போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. அனைவரும் நமது பாராட்டுக்குரியவர்கள். அவர்களை மனமார பாராட்டுவோம்.

கோமதி :இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் ரிச்சா கோஷ். டார்ஜிலிங்கில் கட்டவிருக்கும் புதிய கிரிக்கெட் மைதானத்திற்கு இவரின் பெயர் வைக்கப்படுமென மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார். எத்தகைய பாராட்டு இது!

கௌரி : எல்லாவற்றிலும் முன்னேற்றம் காண்கிறோம். 2047–ல் வல்லரசாவோம் என்று தலைவர்கள் பேசுகிறார்கள். ஆனால் தீவிரவாத இயக்கங்களின் ஆட்டம் மனதைக் கலங்க வைக்கிறதே! ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பழி வாங்கும் எண்ணத்தில் ஜம்மு காஷ்மீரின் பன்போரா, நவ்காம் பகுதியில் மிரட்டல் விடுக்கும் தொனியில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. ஆய்வு செய்த போலீஸ் ஆரிப் நிசார்தார், யாசிர்உல் அஷ்ரப், மக்சூத் அகமதுதார், இர்பான் அகமது ஆகியோரை கைது செய்தனர். அவர்கள் அளித்த தகவலின்படி பரிதாபத்தில் உள்ள அல்பலாஹ் பல்கலைக் கழக பேராசிரியரும், மருத்துவருமான முஸாம்மில் கனி, டாக்டர் ஷாஹீன் சயித் இருவரையும் நவம்பர் 10–தேதி காலை கைது செய்ததுடன் 3000 கிலோ வெடிப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. அன்றையதினம் மாலை செங்கோட்டை அருகே கார் வெடிகுண்டு வெடித்து 15 பேர் பலியானதுடன், 27 பேர் மருத்துவமனையில் உள்ளனர். அதில் புல்வாமாவைச் சேர்ந்த டாக்டர் உமர்நபி தற்கொலைப் படையாக செயல்பட்டுள்ளார்.

மேலும் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 8 டாக்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டாள் : நமது பணத்தில் படித்து மருத்துவராகி, நமது நாட்டிலேயே தொழில் புரிந்து பணம் சம்பாதித்து, நமக்கே துரோகம் செய்ய எப்படித்தான் மனம் வருகிறதோ ?

மீனா : வெடிச்ச காரில் அமோனியம் நைட்ரேட் உடன் டி.ஏ.டி.பி எனப்படும் டிரை அசிடோன் டிரை பெராக்ஸைட் எனும் சக்தி வாய்ந்த வேதிப் பொருள் கலந்திருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். இது ஐரோப்பாவில் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியத்தில் 2015 – 16–ல் நடந்த தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெப்பம், உராய்வு, அதிர்ச்சி உள்ளிட்ட காரணங்களால் எளிதில் வெடிக்க கூடியதாகும்.

ஆண்டாள் : எல்லாம் இறைவன் கைகளில்தான். அவன் மனது வைத்தால் மட்டும்தான் இப்பூவுலகில் அமைதி திரும்பும். நம்ம இப்ப கோவிலுக்குப் போயிட்டு முடித்துக் கொள்வோம். மன்னார்குடி – திருத்துறைப்பூண்டி சாலையில் மாசி மாத பௌர்ணமியில் துர்வாசருக்காக ஈசன் பிரம்மதாண்டவம் ஆடிய தலமாம் திருக்களர் உள்ளது. இங்குள்ள சபை பேரம்பலம். பவளமல்லிகை தல விருட்சம் அமுதவல்லி அம்பாள் உடனுறை பாரிஜாதவனேஸ்வர சுவாமி திருக்கோவிலில், ஈசனின் கட்டளைப்படி முருகப்பெருமான் மார்கழி மாதம் சஷ்டி திதியும், சதய நட்சத்திரமும் கூடிய நாளில் 60,000 முனிவர்களுக்கும், துர்வாசர், வியாசர், காலவர், பராசரர் போன்றோருக்கும் பஞ்சாட்சர உபதேசம் அருளினார். இங்கு ஒரு முறை பஞ்சாட்சரம் ஓதினால் கோடி முறை ஜபித்த பலன் கிடைக்குமென்பது ஐதீகம். முடிந்தால் மார்கழி மாதம் போய் வரலாமா ?

சரி! கேசரி, போண்டாவுடன் Coffee யும் எடுத்துக்கோங்க !

சித்ரா : அக்கா ! ரொம்ப டேஸ்டா இருக்குக்கா ! எங்களுக்கு இந்த கைப் பக்குவம் வரவே மாட்டேங்குது ! அடுத்த மாதம் எங்கு சந்திக்கலாம் ?

மீரா : கோடம்பாக்கத்தில் உள்ள எங்கள் வீட்டில் சந்திப்போம் என்று கூறியதும், நன்றி கூறி தோழிகள் கலைந்தனர்.

## வாழ்த்துகிறோம்

சீர்காழி தாலுக்கா திரு. P. பாஸ்கரன், திருமதி. மாலா இவர்களின் புதல்வன் திரு. B. சீனிவாசனுக்கும், கடலூர் மாவட்டம், பெரியகோட்டம் திரு. R. வெங்கடேசன், திருமதி. V. லதா இவர்களின் புதல்வி V.L. சுவாதிகாவுக்கும் 26–10–25 அன்று நடந்த திருமணத்திற்கும்,

சீர்காழி தாலுக்கா, ராஜீவ்காந்தி நகர் திரு. A. விஜயகுமார், திருமதி. V. புனிதா இவர்களின் புதல்வன் Rtn. V. அருள்செல்வன்–க்கும் சீர்காழி தாலுக்கா, திரு. V. பாஸ்கரன் திருமதி B. பூங்கொடி, அவர்களின் புதல்வி சிவஸ்ரீ. சிந்துஜாவுக்கும் 3–11–25 அன்று நடந்த திருமணத்திற்கும்,

சீர்காழி தாலுக்கா, தென்பாதி திரு. K. சட்டநாதன், திருமதி. ராஜேஸ்வரி இவர்களின் புதல்வி S. சுபிக்ஷாவுக்கும் மயிலாடுதுறை மாவட்டம் சேந்தங்குடி S.நடராஜன், திருமதி. நிர்மலா இவர்களின் புதல்வன் N. வசந்தகுமாருக்கும் 23–11–25 அன்று நடந்த திருமணத்திற்கும் சீர்காழி சங்கத்தின் சார்பாக சந்தனமாலை அணிவித்து வாழ்த்து மடல் வாசித்து வழங்கப்பட்டது.

---

## நிதர்சனம்

கடவுள் படைத்த மனித கடவுள் : பெற்றோர்,

கடவுள் படைத்த இன்னொரு தாய் : மனைவி.

கடவுள் படைத்த நம்பிக்கை : சகோதரன்.

கடவுள் படைத்த பாசம் : சகோதரி.

கடவுள் படைத்த பக்கபலம் : உற்றார், உறவினர்.

கடவுள் படைத்த ஊக்கி : நண்பர்கள்.

கடவுள் படைத்த அத்தனை உறவுகளையும் பொய்யாக்க மனிதனின் படைப்பு : பணம்.

வெற்றி வரும் போது உடன் இருக்கக் கூடாதது – ஆணவமும், அகம்பாவமும். தோல்வியின் போது இருக்க வேண்டியது – நம்பிக்கையும், விடாமுயற்சியும். நிலையான வெற்றியும் இல்லை. நிரந்தரமான தோல்வியும் இல்லை.

– கீரந்தங்குடி நீலா ராஜசேகரன்,
கும்பகோணம்–2.

# குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

சென்னை - 44

## 18-வது மங்கல சந்திப்பு

நடைபெறும் நாள் 28.12.2025

கார்குல சொந்தங்களுக்கு!

வணக்கம்.

சென்னையில் நமது சங்கம் நடத்தும் மாபெரும் 18-வது மங்கல சந்திப்பிற்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

தேதி**: 28.12.2025** (ஞாயிற்றுக்கிழமை) நேரம்**:** காலை **9.00 - 1.00** மணி

இடம்: **ஸ்ரீ ராம் கணேஷ் மஹால், இராஜேந்திர பிரசாத் ரோடு, குரோம்பேட்டை, சென்னை - 44**

## பதிவு செய்யும் வழிமுறைகள்

- **9488818162** என்ற **whatsapp** எண்ணில் **வணக்கம்** என்று அனுப்பவும்.
- வரும் **formல்** உங்கள் வரன் சார்ந்த விவரங்களை **தமிழில்** பதிவிடவும்.
- தாங்கள் பதிவிடும் விவரம் **அப்படியே கையேட்டில் இடம் பெறும்** என்பதை கருத்தில் கொள்ளவும்.

## குறிப்பு

- தமிழ் வழி பதிவுகள் மட்டுமே ஏற்கப்படும்.
- நீங்கள் செய்த பதிவை எங்கள் whatsapp செயலி உங்களுக்கு அனுப்பும் மற்றும் 18-12-2025 பின் ஒரு proof உங்களுக்கு அனுப்பப்படும்.
- மறுமணம் பதிவு செய்வோர் பெயருக்கு பக்கத்திலேயே (மறுமணம்) என தெரிவிக்கவும்.
- நேரில் பங்குபெறும் பெற்றோர் தங்கள் வரனை பற்றியும், எப்படிப்பட்ட வரனை எதிர்பார்க்கிறார்கள் எனவும் அறிமுகம் செய்துகொள்ளலாம்.

**பதிவு செய்ய கடைசி தேதி: 20-12-2025**

பதிவு கட்டணம் ரூ**.700** மட்டும் **9488818162** என்ற எண்ணிற்கு **(Karkathat Welfare Trust) Gpay** செய்யவும்.

## மங்கல சந்திப்பு பணிக்குழு

| | |
|---|---|
| தலைவர் | **திரு.S.மனோகர் - 9444913626** |
| செயலாளர் | **திரு.B.தியாகராஜன் - 9944463333** |
| பொருளாளர் | **திரு.J.தீபன் - 9659632577** |
| அமைப்பாளர் | **திரு. R. ஜவகர் - 9442936710** |

**UPI ID: 9488818162@cnrb**



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: **94437 00375**

Email: thiagu1943@gmail.com

நான் சோம்பேறி என்பதைத்தான் சிலர் நாசுக்காக எனக்கு நேரமில்லை என்று சொல்கிறார்கள். சோம்பல் எல்லாவற்றையும் கடினமாக்கும், சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும்.

## இலவசம் என்றால் கொஞ்சம் சிந்தியுங்கள்!



ஒரு கிராமத்தில் குரங்குகளின் அட்டகாசம் தாங்க முடிய வில்லை. அக்கிராமத்து மக்கள் கூடி குரங்குகளைப் பிடிக்க ஒரு ஆளை ஏற்பாடு செய்தனர். குரங்கு பிடிக்க வந்தவனோ ஒரு குரங்குக்கு ரூ.50 கொடுக்கவேண்டும் என்றான்.மக்களும்சம்மதித்து அனைத்துக்குரங்குகளையும்பிடித்துச்சென்றான். போகும்போது அடுத்தமுறை இதுபோல குரங்கு பிடிக்கவந்தால் ஒரு குரங்குக்கு ரூ.500 நான் தருகிறேன் என்று சொல்லிவிட்டுச்சென்றான்.மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி. சில மாதங்கள் கழித்து ஒருவன் லாரியில் நிறைய குரங்குகளைக் கொண்டுவந்து குரங்கு ஒன்று ரூ.100 என விற்றுக் கொண்டிருந்தான். முதலில் குரங்கு பிடிக்கவந்தவன் ஒரு குரங்குக்கு ரூ.500 தருவதாகக் கூறிச்சென்றதை நினைவில்கொண்டு இந்த குரங்கை வாங்கிவைத்தால் அவனிடமே ரூ.500 க்கு விற்றுவிடலாம் என போட்டி போட்டுக்கொண்டு குரங்குகளை வாங்கினார்கள். தினமும் சாப்பாடு கொடுத்து கவனித்து வந்தார்கள். நாட்கள் சென்றன. சொல்லிச்சென்றது போல குரங்குகளை வாங்குதற்கு வருவதாகச் சொல்லிச் சென்றவன் வரவில்லை. தற்செயலாக அந்த கிராமத்து இளைஞன் வெளியூர் சென்றபோது அவனைப் பார்த்ததாகக் கூறினான். மேலும் அவன் பிடித்துச் சென்ற குரங்கைதான் நம்மிடமே 100 ரூபாய்க்கு விற்றிருக்கிறான். அவன் இனிமேல் வரமாட்டான் என்பதையும் கூற அனைவரும் வாய் பிளந்து நின்றனர்.மக்களுக்கும் இப்போதுதான் அவர்களின் பேராசை புரிந்தது. சற்று சிந்திக்க வேண்டாமா ? 50 ரூபாய்க்கு பிடித்தவன் 500 ரூபாய்க்கு வாங்குவானா ?கடைகளில் ஒன்று எடுத்தால் இரண்டு இலவசம் என்கிறார்களே! வியாபாரம் செய்பவர் நஷ்டத்திலா வியாபாரம் செய்வார்? மொத்ததில் வாங்கி சில்லரை வியாபாரம் செய்வதாகக் கொண்டால்கூட இத்துணை அளவிற்கு இலவசம் நிச்சயம் தரமுடியாது. வியாபாரம் செய்ய வந்தவர் நோக்கம்தான் என்ன ? பணம் சம்பாதிப்பதுதானே! இலவசம் என்றால் கொஞ்சம் சிந்தியுங்கள்!

## சாதிக்கமுடியும்

யானைக்குட்டியை சிறுவயதில் ஒரு கனமான இரும்புச்சங்கிலியால் பிணைத்துக் கட்டிப்போட்டிருப்பார்கள்.யானைக்குட்டி அதிலிருந்து விடுபடுவதற்கு பலமுறை போராடிப் பார்க்கும்.முட்டி மோதி பயனில்லாததை பல நாட்கள் பலமுறை தோற்பதை அறிந்ததும் ஒரு கால கட்டத்தில் தன்னால் விடுபட முடியாது என்ற ஒரு முடிவுக்கு வந்து விடுகிறது.விடுவித்துக்கொள்ளும் முயற்சியை விட்டுவிடுகிறது.இப்போது அந்த யானை பல நூறு கிலோ எடை கொண்ட பிரம்மாண்டமான மலைபோல நிற்கிறது. அதன் கால்மீது ஒரு குச்சியை மட்டும் காவலாக வைத்துவிட்டாலும் அந்த யானை தப்பிஓட முயற்சிப்பதே இல்லை.தன்னைக்கட்டி நிற்கவைத்திருப்பது ஒரு சாதாரண குச்சிதான்,லேசாக அசைந்தாலே அது விடுபட்டுவிடும் என்பது கூட அந்த யானைக்குத் தெரியவில்லை.

நம்மில் பலர் இந்த யானைபோலவே இருக்கிறார்கள். தமது திறமைகள் என்னென்ன ,நம்மால் எதையெல்லாம் சாதிக்கமுடியும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் மிகச்சாதாரணத் தடைகளுக்கெல்லாம் பயந்து, ஒதுங்கி நிற்கின்றோம். அவற்றை உடைத்துக்கொண்டு வெளியே வரத் தயங்குகின்றோம். நாம் ஒவ்வொருவரும்யானை பலம் கொண்டவர்கள். நம்மைச் சில குச்சிகள்தான் சிறைப்படுத்திவைத்திருக்கின்றன. அத்தடைகளை நீக்கி வெளி வரும்போதுதான் நமது முழுப்பலமும் , திறமையும் உலகுக்குப் புலனாகின்றது. விரைந்த முன்னேற்றமும் சாத்தியமாகிறது.

## சிரிக்கலாம் வாங்க !



1. ஸ்ரீபெரும்புதூர்ல நிலம் நல்ல விலைக்குப் போறதா கேள்விப்பட்டேன்.
   ஆனா,என்னாலதான் விக்கமுடியலை!
   ஏன் ?
   அங்கே எனக்கு நிலம் இல்லையே!
2. உங்களுக்கு இருந்த தோஷம் எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் நீங்கிடுச்சாமே, உண்மையாவா ?
   உண்மைதான்சார். என் சந்தோஷமெல்லாம் நீங்கிட்டுது !
3. என்னங்க இது ?..ஒரு வாரமா தினமும் ஒரு காலண்டர் வாங்கிட்டு வர்ரீங்களே.....எதுக்கு ?
   நீதானே ,டெயிலி காலண்டர் வாங்கிட்டு வாங்கன்னு சொன்னே!
4. இவ்வளவு தன்னடக்கமான மானேஜரை நான் எந்த ஆபிஸ்லேயும் பார்த்ததே இல்லை.
   அவரு ரூமுக்கு போறவரைக்கும் குனிஞ்ச தலையை நிமிர்த்தவே இல்லையே!
   நீங்க வேறே! ஆபிசுக்குள்ள அவருக்கு அவ்வளவு கடன்!.
5. அந்த ஆளு மாசத்துக்கு ரெண்டு மூணு படத்துக்கு பூஜை போடுவாரு...
   அவ்வளவு பெரிய புரொடியூசரா ?
   இல்லை அவ்வளவு பெரிய புரோகிதர்!

## சோம்பலுக்கு விடைகொடுப்போம்!

நாளை செய்வோம் என்று நினைத்தாலே நாம் சோம்பேறிகளாகி விடுகின்றோம். செயல்களை ஒத்திவைக்கும்போது அவற்றை மறக்கிற சூழலும் ஏற்பட்டு பிறகு நாம் தவறு இழைத்தவர்களாகத் தண்டனைக்கு உட்படுகிறோம்.சோம்பல் நம்மைத் தாழ்த்துகிறது. நம்மைச்சுற்றி இருப்பவர்களையும் பாதிக்கின்றது. மாணவப்பருவத்தில் நம் சோம்பலால் அதிகம் பாதிக்கப்படுவது நம் பெற்றோர்கள்தான். அவர்கள் பணிக்குச் செல்லுகிற பெரும் பொறுப்பையும் தாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல நேரங்களில் நம் சோம்பல் அவப்பெயரையும் தொந்தரவையும் தருகிறது.

உலக வரலாற்றை படித்தால் ,சாதனையாளர்கள் எல்லோரும் சுறுசுறுப் பானவர்களாகவும்,கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்பவர்களாகத்தான் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் தூங்குகிற நேரம் குறைவு. ஓய்வெடுக்கும் நேரம் சொற்பம். வீண் பொழுது போக்குகளில் அவர்கள் ஈடுபட்டதே இல்லை.

நாம் சுறுசுறுப்பாக இருக்கும்போது நம் உறுப்புகள் அனைத்தும் வேகமாகவும் , சீராகவும் செயல்படுகின்றன.அதனால் இன்றிலிருந்து நாம் சோம்பலுக்கு விடைகொடுப்போம். உற்சாகமாகச் செயல்படுவோம்.படிப்பு சுலபமாகும்,பாடம் சுவையாகும். வாழ்வு இனிமையாகும்.

### 1.சம்பள உயர்வு

ஒருவருடைய சம்பளம் ரூ.250 லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டது.அவருக்குக் கிடைத்த சம்பள உயர்வு எத்தனை சதவிகிதம் ?

### 2.நான் என்ன உறவு?

மலர்விழியின் மகள் எனது மகனின் அம்மாவாக இருந்தால் ,நான் ஆணாக இருப்பின் மலர்விழிக்கு நான் என்ன உறவு ?



**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**

நல்லொழுக்க நெறியில் நின்று உலகப்பற்றுகளை ஒழித்தவர்களின் பெருமையையே நூல்கள் சிறந்த பெருமையாக விரும்பிக்கூறும்.



## கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

1. கதிர்வீச்சை அறிந்து ,ரேடியத்தைக் கண்டுபிடித்து அதை புற்றுநோய்க் குணப்படுத்த உதவியவர்.ஆனால் அக்கதிர்வீச்சினாலேயே பாதிக்கப்பட்டு இறந்த, இருமுறை நோபல்பரிசு பெற்ற விஞ்ஞானி. இவர் யார் ?
2. இத்தாலிய மன்னரின் அரசவையில் நகரவடிவமைப்பு கலைஞராக இருந்து நகரின் நீர் வழங்கும் திட்டம் ஆகியனவற்றுக்கான வரைபடங்கள் வரைந்தவர். இவர் யார் ?
3. இன்னும் பல நூற்றாண்டுகள் சென்ற பிறகு பொருட்கள்,சுமைகள் ஆகியன குதிரைகளைப்பயன்படுத்தாமலே நகரும்.மேலும் மனிதர்கள் காற்றில் பறப்பார்கள்.போன்ற முன்னோக்குக் கருத்துக்களை வெளியிட்டவர். இவர்யார் ?
4. வானமும், கடல் நீரும் ஏன் நீல நிறமாக இருக்கிறது ?என சிந்தித்து ஆராய்ந்ததில் சூரிய ஒளி சிதறடிக்கப்படும்போது அலைநீளம் குறைந்த நீல நிறம் பிரதிபலிக்கப்படுவதே இதற்குக் காரணம் எனக் கண்டறிந்து, இதற்கான விளக்கம்கூறியவர்.இதனைக்கூறியதினம் பிப்ரவரி 28,இது இந்திய அறிவியல் தினமாகக்கடைபிடிக்கப்படுவதற்குக் காரணமானவர். இவர் யார் ?
5. இந்தியா பொக்ரானில் அணுகுண்டு வெடித்து சோதனைசெய்தபோது அதை உலகமே வியந்து பார்க்கச் செய்தவர். ரோகிணி என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியவர்.

   முடநீக்கியல் துறையில் 300 கிராம் எடையுள்ள லேசான நடை சாதனத்தை உருவாக்கி நோயாளிகளுக்கு உதவியவர்.மாணவர்களுக்கு கல்வி போதிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.பாரதப்பிரதமரின் அறிவியல் ஆலோசகராக இருந்தவர். தமிழ் நாட்டின் கடைக்கோடியில் பிறந்து இந்தியாவிற்கே முதல்குடிமகனாக வந்தவிஞ்ஞானி. இவர் யார் ?

## பொன்மொழிகள் தொகுப்பு

1. தோல்வி கிட்டும்போது ஏமாற்றம் ஏற்படலாம் ,ஆனால் முயற்சி செய்யாவிட்டால் பெரும் அழிவே ஏற்படும். – பெரிக்ஸ்
2. வாழவேண்டுமென்று நினைப்பவன் எந்த விமர்சனத்தையும் தூக்கி எறியத் தெரிந்திருக்க வேண்டும். – ஒரு கவிஞர்
3. இடமும்,நிலைமையும் முக்கியமல்ல,மனம் மட்டுமே ஒருவனை இன்புறவோ, துன்புறவோ செய்கிறது. – லாஎஸ்டி ரேஞ்ச்
4. ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால்தான் அதிக தீமை ஏற்படும். – பழமொழி
5. உழைப்பு என்றும் வீண்போகாது,உழைப்பிற்குத்தகுந்த பலன் ஒரு நாள் கட்டாயம் கிடைக்கும். – நெப்போலியன் ஹில்
6. மரியாதையை விதைப்பவன் நட்பை அறுவடைசெய்வான்,அன்பைப் பயிர்செய்பவன் அருளைப் பெறுவான். – பேஸில்
7. தன்னம்பிக்கை இருந்தால் ,அது துணிவையும் தைரியத்தையும் தரும் – நார்மன் பீல்ட்
8. சரியாகச்செய்வதைவிட.சரியானதைச்செய்வதுதான் முக்கியமானது. – பீட்டர் டக்கர்
9. அன்பின் ருசி அறிந்த உலகில் ஆயுதங்கள் மட்கிப்போய்விடுகின்றன. – ஆன்றோர் வாக்கு

## நல்ல எண்ணம்,நல்ல செயல்களே மனிதனை வாழவைக்கும்!

திருடன் ஒருவன் பெரிய அளவில் திருடி வாழ்க்கையில் செட்டிலாக நினைத்தான்.அரண்மனையில் திருடச்சென்றான்.ஆனால் அங்கு அரசனும்,அரசியும் பேசுவதை ஒட்டுகேட்க நேர்ந்தது.அவர்கள் இளவரசியை ஒரு துறவிக்குத் திருமணம் செய்துவைப்பது என பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டான்.திருடுவதை விட்டுவிட்டு துறவியாக வேஷமிடவிரும்பி துறவியின் ஆடைகளை அணிந்து கொண்டு மற்ற துறவிகளோடு அமர்ந்துகொண்டான்.மறுநாள் மன்னரும் அரசியாரும் வந்த ஒவ்வொருவரிடமும் கைகட்டி மிகுந்த மரியாதையுடன் தங்களது மகளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டினர்.துறவிகளோ தங்களால் திருமணம் செய்துகொள்ள இயலாது எனக்கூறிவிட்டனர்.கடைசியாக துறவி உடையிலிருந்த திருடன் முன் வந்து அரசன் கைகளைக் கட்டிக்கொண்டு மிகுந்த மரியாதையுடன் கேட்டான்.கண்ணைத்திறந்த துறவி(திருடன்)நாட்டைஆளும் மன்னர் தன்முன் பணிவுடன் கைகட்டி நிற்பதைப் பார்த்ததும்துறவி உடைக்கு இவ்வளவு மகத்துவமா ? அப்படியானால் உண்மையாகத் துறவியானால் எவ்வளவு பெருமை என நினைத்தான்.மனம் மாறியது அரசனின் காலில் விழுந்து நடந்தனவற்றைக்கூறிவிட்டு உண்மையான துறவறத்தை மேற்கொண்டான்.

## நம்பிக்கையுடன் விழிப்புணர்வும் வேண்டும்

படிப்பு,அறிவு ஆற்றல் மட்டும் இருந்தால் போதாது.நிகழ்காலத்திற்கு ஏற்ப விழிப்புணர்வு வேண்டும். ஒருவன் எத்தனை திறமைகள் பெற்றிருந்தாலும் ,அது அவனுக்கு பயன்தராது போய்விடும். எனவேதான் பெரிய நிறுவனங்கள் வேலைக்கு மனுச் செய்திருப்பவர்களுக்கு ( Presence of Mind ) நிகழ் காலத்திற்கேற்ப விழிப்புணர்வு இருக்கிறதா என பலவிதங்களில் சோதனை செய்கிறார்கள்.

தான் வயலின் வாசித்தால் பாலைவனத்தில்கூட மழைபெய்யச் செய்யமுடியும் என தனது வயலின் இசை மீது அசையாத நம்பிக்கை கொண்ட பெரிய வயலின் வித்வான் ஒருமுறை சர்க்கஸ் வேடிக்கை பார்க்கச் சென்றார்.அங்கே சர்க்கஸ் கலைஞர் வயலின் வாசிக்க கரடி டான்ஸ் ஆடியது.சர்க்கஸ் பார்க்க வந்திருந்தவர்கள் ஒட்டுமொத்தமாக எழுப்பியகோஷம் கூடாரத்தையே அதிரவைத்தது.இதனைப் பார்த்த நமது வயலின் வித்வான் சர்க்கஸ் கலைஞனை அணுகி நன்கு பழக்கப்பட்ட கரடியைத்தான் உன்வயலின் இசையால் ஆட வைக்கமுடியும்.ஆனால் என் வயலின் இசை எந்த மிருகத்தையும் நடனமாடவைக்கும் என்று கூறினார். சர்க்கஸ் கலைஞர் அதை பேத்தல் என மறுக்க இருவருக்குமிடையே அங்கே ஒரு போட்டியே ஆரம்பமானது.

சர்க்கஸ் கலைஞர் வயலின் வித்வான் முன் முதலில் ஒரு சிங்கத்தை அனுப்பினார்.வித்வான் இசைகேட்டு சிங்கம் சுழன்று சுழன்று ஆடத்தொடங்கியது.சர்க்கஸ் கலைஞர் அடுத்து ஒரு சிறுத்தையை அனுப்பினார்.அதுவும் வித்வான் வயலின் இசைக்குத் தன்னை மறந்து ஆடியது. அடுத்து ஒரு புலி வந்தது. வயலின் வித்வான் சற்றும் பதறாது தனது வயலினை வாசிக்கத் தொடங்கினார்.ஆனால் அந்த புலியோ இசைக்கு மயங்கவில்லை. வயலின் வித்வான் மீது பாய சீறிக்கொண்டு வந்தது. பார்வையாளர்கள் சப்தம் போட்டுக்கொண்டு ஓடினர். நமது வித்வானும் வயலினை காற்றில் பறக்க விட்டு விட்டு கடைசி நிமிடத்தில் தலை தெறிக்க ஓடி அதிஷ்டவசமாக புலியிடமிருந்து தப்பித்துக்கொண்டார்.சர்க்கஸ்காரர்களால் புலிகூண்டில் அடைக்கப்பட்டது. சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட வயலின் வித்வான் தோல்வியை ஒப்புக் கொண்டார்.சர்க்கஸ் கலைஞர் சிரித்தபடியே கூறினார். அது ஒரு செவிட்டுப் புலி. வேடிக்கை பார்க்கவந்த கூட்டத்தினர்கூட அப்புலிக்கு காது துவாரமும், ஏன்காது மடல்களுமே இல்லை என்பதை சில வினாடிகளுக்குள் கவனித்து தப்பிக்க முயன்றுவிட்டனர்.ஆனால் நீங்களோ உங்கள் வாசிப்பின் மீதுகொண்டிருந்த அபார நம்பிக்கையால் கண்திறந்து புலியை கவனிக்கத்தவறிவிட்டீர்கள்.

---

## முயற்சிப்போம்!

விடா முயற்சிக்கும்,
வீண் முயற்சிக்கும்
ஒரெழுத்து தான் வித்தியாசம்
முயற்சிக்க முயற்சிப்போம்!

பலம் எது ? பலவீனம் எது ?
புரிந்து கொள்ள
இரண்டாவதாக
முயற்சிக்க வேண்டும்!

எதுவாக நினைக்கிறாயோ
அதுவாக மாறுவாய்...
அறிஞர்கள் சொன்னது
அதற்காக,
ஆண்கள் சூரியனாகவும்,
பெண்கள் நிலவாகவும்
ஆக முயற்சிக்கலாமா!



திரும்பி செல்வதை விட
இறப்பதே மேல்
என்றான் நெப்போலியன்....
அதற்காக,
கடற்கரைக்கு சென்ற நாம்
சுனாமி வந்தால்
திரும்பாமல் இருக்க முடியுமா!

நிலவில் உழவு செய்ய
முயற்சியுங்கள் தப்பில்லை....
கிச்சுக் கிச்சு மூட்டி
சிரிக்க வைக்க முயற்சிக்காதீர்கள்
சாத்தியமில்லை!

முயற்சிக்கு
முற்றுப்புள்ளி இல்லை....
முயற்சியுங்கள்
முடியும் என்பதை
முழுமையாக உணர்ந்த பின்!

---

**சம்பள உயர்வு விடை:** 20 சதவிகிதம்

**நான் என்ன உறவு? விடை :** மலர்விழிக்கு மருமகன்

**கண்டுபிடியுங்கள் பார்ப்போம்! விடை :** 1. மேரி கியூரி, 2.ரோஜர் பேக்கன், 3. லியனார் டோ டாவின்சி 4. சர்.சி.வி. ராமன் 5.ஏ.ப்.ஜே.அப்துல்கலாம்

# குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம்

பதிவு எண் : **18/2015**

**10,11 செல்வராஜ் நகர், அம்மாப்பேட்டை - அஞ்சல் - 608 401.**

**சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கத்திற்கு 08.11.2025**
**அன்று புதியதாக பதவியேற்றுள்ள**

| | |
|---|---|
| தலைவர் | : திரு. **S. சண்முகசுந்தரம்** பிள்ளை |
| செயலாளர் | : திரு. **M.G. ரவிச்சந்திரன்** பிள்ளை |
| பொருளாளர் | : திரு. **Dr. V.R. பாஸ்கரன்** பிள்ளை |
| துணைத் தலைவர் | : திரு. **S. பூங்குன்றன்** பிள்ளை |
| துணை செயலாளர் | : திரு. **S. விவேக்** பிள்ளை |

*ஆகியோர்கள் பணி சிறக்க வாழ்த்தி மகிழ்கின்றோம்.*

**A.G. சிவராமன்** பிள்ளை
தலைவர், செல் : **97870 68062**

**S. இராமச்சந்திரன்** பிள்ளை
செயலாளர், செல் : **94864 55841**

**R. திலகம்** பொருளாளர்
செல் : **97894 12635**

**G. இராஜேந்திரன்** பிள்ளை
பிரதிநிதி

**A. வேணுகோபால்** பிள்ளை
துணைத் தலைவர்

**S. சிவக்குமார்** பிள்ளை
துணைத் தலைவர்

**M. செந்தில்வேலாயுதம்** பிள்ளை, துணைச் செயலாளர்

# குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம்

பதிவு எண் : **18/2015**

**10,11 செல்வராஜ் நகர், அம்மாப்பேட்டை - அஞ்சல் - 608 401.**

**A.G. சிவராமன்** பிள்ளை
தலைவர், செல் : **97870 68062**

**S. இராமச்சந்திரன்** பிள்ளை
செயலாளர், செல் : **94864 55841**

**R. திலகம்** பொருளாளர்
செல் : **97894 12635**

## *அழைக்கின்றோம்! அன்புடன்! அழைக்கின்றோம்!*

அன்புடையீர்! வணக்கம்.

சிதம்பரம் நகருக்கு ஆன்மீக சுற்றுலாவாகவோ, பணி நிமித்தமாகவோ, அண்ணாமலைப் பல்கலைகழக பட்டப் படிப்பு சேர்க்கைக்காகவோ வருகைத்தரும் நம் இனமக்கள் நமது சங்க மண்டபத்தில் இலவசமாக தங்கிச் செல்ல ஏற்பாடு செய்துள்ளோம்.

இரு குளிர் அறை குளியல் அறையுடனும், மேலும் இரு மண்டபங்களுடன் தங்கிச் செல்ல ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தனியாக 4 கழிவறைகளும், 2 குளியல் அறைகளும் உள்ளன. குளிக்க வாட்டர் ஹீட்டர் வசதியும் உள்ளது. இவைகளை நம் இன வெளியூர் மக்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம். மிக்க நன்றி!

| | | |
|---|---|---|
| தொடர்புக்கு : | **V. தெய்வநாயகம்** பிள்ளை | **செல் : 94876 35982** |
| | **K. குமார்** பிள்ளை | **செல் : 63800 28887** |
| | **M. செந்தில் வேலாயுதம்** பிள்ளை | **செல் : 94437 95034** |

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/12** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>**பூர்வீகம் :** MA. Melvanniyur, Chidambaram<br>**விருப்பம் :** Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 2/12** செல்வி **B. அனிதா**<br>மூலம் – 4ம் பாதம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி<br>விருப்பம் : நன்கு படித்த பணியில் உள்ள வரன். | **12.11.99**<br>160 cm | B.Com., | | திரு. G. பாஸ்கர்,<br>மேற்கு தெரு, அருகேரி,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – **606 105.**<br>Cell : **99769 64604** |
| **B 3/12** செல்வி **T. ஜனனி**<br>உத்திராடம்<br>வங்காரமுட<br>பூர்வீகம் : சூரியனார் கோவில்<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன் | **2.3.2000**<br>162 cm | B.Com., | Accenture Solutions India<br>Rs. 20,000/- PM | திரு. S. Thiruselvam<br>MIG 96, 1st Cross Street,<br>Mogappair Eri Scheme,<br>Chennai - 600 037.<br>Cell : **93617 69167, 94448 92845**<br>E- Mail : stselvam1963@gmail.com |
| **B 4/12** செல்வி **சிவ. அபிராமி**<br>பூரம்<br>எருமளுட<br>பூர்வீகம் : கெளுத்தூர் | **16.9.2001** | MBA | HR in Sacha Engineering P. Ltd., Sholinganallur | திரு. SKP. சுரேஷ் (சிவசுப்ரமணியன்),<br>**1/25,** கீழத் தெரு, கெளுத்தூர்,<br>கீழ சூரியமூலை, திருலோகி அஞ்சல்,<br>துகிலி வழி,<br>திருவிடைமருதூர் தாலுகா,<br>தஞ்சாவூர் மாவட்டம் – **609 804.**<br>Cell : **94432 42335, 94874 92335** |
| **B 5/12** செல்வி **S. பத்மபிரியா**<br>உத்திரம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சென்னை (அ) பெங்களூர் (அ) ஹைதராபாத் பணியில் உள்ள வரன். | **18.6.2002**<br>5' - 6" | B.Sc. Optometry | ராஜன் கண் மருத்துவமனை | திரு. K. சண்முகநாதன்,<br>49/1, காமராஜர் தெரு,<br>பெண்ணாடம் – **609 105.**<br>Cell: **97158 61571, 97155 50815** |
| **B 6/12** செல்வி **சு. நிவேதா**<br>மகம்<br>தூதுகுடையான்<br>பூர்வீகம் : கும்பகோணம் | **25.08.95** | B. Arch.,<br>M. Plan (Transport)<br>SPA Delhi | Transport Planer, MNC, Nature of Work In system only | திரு. தி. சுப்பராயன், Rtd. SE TNEB<br>No. 4C, ஜெயலட்சுமி அபார்ட்மெண்ட்,<br>சுபஷ்ரி நகர் விரிவாக்கம்,<br>முகலிவாக்கம், சென்னை–600116<br>Cell : **98404 94072** |
| **B 7/12** செல்வி **கு. ஷாந்தினி**<br>பூரட்டாதி<br>குமாரகுட<br>கழனிவாசல் | **22.10.1999**<br>160 cm | BCA | B.P.M. - வழுவூர் மயிலாடுதுறை | திரு. கி. குருமூர்த்தி,<br>**81,** மேல வெள்ளாள தெரு,<br>கழனிவாசல், மங்கைநல்லூர் அஞ்சல்,<br>குத்தாலம் தாலுகா – **609 404.**<br>Cell : **94863 10635, 94432 29109** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/12** செல்வி **V. சுபஸ்ரீ**<br>உத்திராடம்<br>சேதரிய<br>பூர்வீகம் : கொத்தட்டை (பெண்ணாடம்)<br>விருப்பம் :.MBBS Engineer (or) Equivalent படித்த பணியில் உள்ள வரன் | **20.07.97**<br>154 cm | MBBS | | திரு. P. வேல்முருகன்,<br>22D- Type III Quarters,<br>வட்டம் **20,**<br>நெய்வேலி – **607 803.**<br>Cell : **94434 39280, 78068 90747** |
| **B 9/12** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 35, ஷர்மிளா அவென்யு,<br>விபிஷ்ணபுரம், அம்மாபேட்டை,<br>சிதம்பரம் – **608 401.**<br>Cell: **99769 97310,90954 68213** (W) |
| **B 10/12** செல்வி **P. தேவதர்ஷினி**<br>விசாகம் 3ம் பாதம்<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : திருவிடைமருதூர் | **19.7.2002** | B.E. (ECE) | ZOHO Company, Chennai | திரு. R. பொன்னரசன்,<br>90/A, தெற்கு வீதி,<br>திருவிடைமருதூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – **612 104.**<br>Cell : **88380 01039,**<br>**94428 61136** (W) |
| **B 11/12** செல்வி **க. ஜீவிதா**<br>உத்திராடம்<br>கொங்கராய<br>பூர்வீகம் : ஆக்கூர் | **13.5.2001**<br>160 cm | M.Sc.<br>Chemistry | Accenture,<br>Chennai | திரு. க. கண்ணன்,<br>380, முதன் முதன்மை சாலை,<br>மகாலட்சுமி நகர், திம்மாவரம்,<br>செங்கல்பட்டு – **603 101.**<br>Cell : **76394 72947, 81226 78446** |
| **B 12/12** செல்வி **R. சுபிக்ஷா**<br>Pooradam<br>Nanuda<br>பூர்வீகம் : Elanthoppu<br>விருப்பம் : குணமுள்ள நல்ல வேலையில் உள்ள வரன் | **12.3.99** | B.E. (ECE), | Embeded Software Engineer<br>Rs. 5 Lakhs/PA | திரு. V. Rajasekaran,<br>Main Road,<br>Elanthoppu - 609 201<br>Mayiladuthurai Tk.,<br>Cell : **94446 10907** |
| **B 13/12** செல்வி **R. ஆர்த்தி**<br>உத்திராடம்<br>நன்னுட<br>பூர்வீகம் : மேலையூர்<br>குறிப்பு : விவாகரத்தானவர் | **28.03.92** | B.Tech.,<br>C.S., | IBM | திரு. N. Raju,<br>2/19, East Street, Melaiyur,<br>Karuvazhakkarai Post,<br>Mayiladuthurai Dt. - 609 304.<br>Cell : **98432 54986, 99435 16529** |



| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/12** செல்வன் **D. கல்யாணசுந்தரம்**<br>உத்திராடம்<br>காளிங்கராயர்<br>பூர்வீகம் : அருகேரி – பெண்ணாடம் | **22.09.96** | B.E.(Civil), | Junior Drafting<br>Officer (JDO)<br>Government Staff<br>Near GH Trichy<br>Rs. 6,00,000/PA | திரு. G. துரைசாமி,<br>திருவள்ளுவர் தெரு,<br>பெண்ணாடம்<br>Cell : **97157 04601, 97157 04600** |
| **B 2/12** செல்வன் **R. அரவிந்த்**<br>பரணி<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை (சூரியனார் கோவில்) | **03.07.94**<br>168 cm | M.Tech., | IT, Net Access<br>India Ltd.,<br>Chennai<br>Rs. 13 Lakhs/PA | திரு. R. ரமேஷ்,<br>64, காவேரி சதுக்கம்,<br>தந்தை பெரியார் நகர்,<br>விழுப்புரம் – **605 401.**<br>Cell : **94427 41245, 94890 12545** |
| **G 3/12** செல்வன் **பாலாஜி S.R.**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Accenture<br>Chennai<br>Analyst<br>Rs. 9 Lakhs.PA | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **B 4/12** செல்வன் **R. Raveenkumar**<br>Sathayam<br>Kanagaraya<br>பூர்வீகம் : Madurai<br>விருப்பம் : Employed (or) Employable good looking girl. | **21.11.93**<br>175 cm | M.Tech<br>VLSI | Senior Lead Enginner<br>Qualcomm, Bangalure<br>Rs. 45 Lakhs/PA | திரு. A. Shankar,<br>Plot No. 28& 29, VGN Highness,<br>Srinivasapuram, Iyyappanthagal,<br>Chennai - 600 056.<br>Cell : **78459 14635, 94880 94635** |
| **G 5/12** செல்வன் **S. சுப்பிரமணியன்**<br>பரணி 3ம் பாதம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **30.06.97**<br>175 cm | B.E., | Advisor (Alfred)<br>Holdings - Dubai<br>Work from home<br>Rs 10 Lakhs/PA | திரு. S. சண்முகம்,<br>5, லட்சுமி நகர், மேலமையூர்,<br>வல்லம் (PO),<br>செங்கல்பட்டு – **603 003.**<br>Cell : **74023 74666** |
| **B 6/12** செல்வன் **J. Renganayagam**<br>Kettai<br>Kaalingaraaya<br>பூர்வீகம் : Tirunelveli<br>விருப்பம் : Expecting bride from IT professional | **01.12.97** | B.E. (Mech) | Technology Analyst<br>at Infosys Ltd.,<br>Bangalore | திரு. M. Jawahar,<br>49A, Rajeev Nagar,<br>Kangayam,<br>Tiruppur Dist. - 638 701.<br>Cell : **94865 40918** |
| **G 7/12** செல்வன் **R. பிரவீன்**<br>சுவாதி<br>குழுமுட<br>பூர்வீகம் : செந்துறை | **18.12.95**<br>5' - 3" | B.E.,<br>MBCIT | IT Company<br>Rs. 70,000/PM | திரு. C. ரமேஷ்,<br>**66,** பள்ளிக்கூடத் தெரு,<br>அம்மாபேட்டை, சிதம்பரம்.<br>Cell : **98423 03216,** |
| **G 8/12** செல்வன் **R. ராகுல்**<br>ரேவதி –02<br>சாத்தனுட<br>பூர்வீகம் : பெருஞ்சேரி<br>விருப்பம் : பணியில் உள்ள வரன். | **15.8.95**<br>178 cm | B.E. (EEE) | Associate<br>Azentio, Chennai<br>Rs 6 Lakhs/PA | திரு. V. ராஜீ,<br>No. 388C/2, செட்டித் தெரு,<br>வள்ளாலகரம்,<br>மயிலாடுதுறை – **609 001.**<br>Cell : **97865 93037, 88255 02182** |
| **G 9/12** செல்வன் **S. ஆகாஷ் சுந்தர்**<br>சுவாதி – 4ம் பாதம்<br>பில்லுடையார்<br>பூர்வீகம் : மேலப்பெரும்பள்ளம் | **15.12.98**<br>175 cm | B.E<br>MBA | Business | திரு. M. செல்வமுத்துக்குமரன்,<br>15, பாபுராவ் தெரு,<br>திருப்பாதிரிபுலியூர்,<br>கடலூர் – **607 002.**<br>Cell : **94435 63131, 96772 66266, 94437 15222** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 10/12** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.06.99**<br>178 cm | B.Tech (ECE),<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amentum<br>Bengalure | திரு. குமார் (எ) சிவ. சிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : **97873 10010, 91509 16765** |
| **B 11/12** செல்வன் **B. Vijay**<br>Mrigrashira<br>Muthanuda<br>பூர்வீகம் : Mannipallam<br>விருப்பம் : Mayiladuthurai | **11.10.98** | B.E.,<br>(Civil) | Technical Lead<br>Cognizant<br>Technology<br>Solutions<br>Rs. 6.8 Lakhs/PA | திரு. G. Baskaran,<br>59B, Subramaniya Nagar,<br>Government School Backside,<br>Thirumullaivoyal, Chennai - 600 062.<br>Cell : **99404 02315, 80723 01474** |
| **G 12/12** செல்வன் **S. கண்ணன்**<br>புனர்பூசம்<br>காங்கேயம்<br>பூர்வீகம் : திருச்சிற்றம்பலம், மணல்மேடு<br>விருப்பம் : நல்ல படித்த குணமுள்ள வரன் | **08.04.95**<br>180 cm | M.Tech.<br>(EEE) | State Bank of India<br>Associate<br>Near Chidambaram | திரு. R. சண்முகம்,<br>238, காவேரி நகர், 10வது தெரு,<br>புதுக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் – 613 005.<br>Cell : **94866 34464, 97913 55093** |
| **G 13/12** செல்வன் **சி. அட்சயபாலன்**<br>பூசம்<br>குளத்துட<br>பூர்வீகம் : தில்லைவிடங்கன்–சீர்காழி தாலுக்கா | **10.11.98**<br>5' - 7" | B.E. (EEE)<br>P.G.D. (P.P.E.) | Assistant Manager<br>ENOC - Adani<br>Power Ltd.,<br>Ahmedabad, Gujarat<br>Rs. 8.5 Lakhs/PA | திரு. பா. சிவகுமார்,<br>73, ஜே.ஜே. நகர், 1வது தெரு,<br>மருத்துவக் கல்லூரி சாலை,<br>தஞ்சாவூர் – 613 007.<br>Cell : **94897 57677, 96293 81975** |

## நம்பிக்கை மொழிகள்

1) கற்றுக் கொள்ள வேண்டுமானால், முதலில் அறிந்ததை சொல்லிக் கொடுப்போம்; பெற்றுக்கொள்ள வேண்டுமானால் முதலில் முடிந்ததை அள்ளிக்கொடுப்போம்.

2) இரவுக்குப் பின் பகலைத் தருகின்ற இறைவன், குளிருக்குப் பின் வெயிலைத் தருகின்றவன், நிச்சயம் ஒவ்வொரு துன்பத்திற்கு பின் இன்பத்தையும் தருவான்.

3) சிறு சிறு நீரோட்டங்கள் தான் நதியை உருவாக்குகிறது ; சிறு சிறு போராட்டங்கள்தான் நம் வாழ்க்கையை உருவாக்குகிறது.

4) பெருந்தன்மை என்பது நம்மால் முடிந்ததை விட அதிகமாகக் கொடுப்பது; பெருமை என்பது நமக்குத் தேவையானதைவிட குறைவாக எடுத்துக்கொள்வது.

5) ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலிருந்தும் நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்வோம்; அதுவே நாம் நம் வாழ்க்கையில் வெற்றி பெற உதவும்.

6) முகங்களைக் கண்டு அன்பு காட்ட வேண்டாம்; மனதினைக் கண்டு அன்பு காட்டுவோம். முகத்தின் அழகு மாறக் கூடியது; மனதின் அழகு மாறுவது இல்லை.

7) வாழ்க்கையில் நிகழ்ந்ததை மறுக்கவும் முடியாது; நிகழ்வதை தடுக்கவும் முடியாது; நிகழப் போவதை நிறுத்தவும் முடியாது. இவை அனைத்தையும் நம்மால் கடந்து போக முடியும்.

8) வாழ்க்கையில் இறைவன் நமக்கு கொடுத்திருப்பது வெற்றுக் காகிதம். அதில் எழுதுவதா, வரைவதா, கிறுக்குவதா, இல்லை கிழிப்பதா என்பது நம் கையில் தான் உள்ளது.

9) இருளாய் இருப்பதற்கு எதுவுமே செய்ய வேண்டாம்; ஆனால் ஒளியாய் இருப்பதற்கு உழைத்தே ஆக வேண்டும்.

10) புன்னகையும், மௌனமும் மிக சக்தி வாய்ந்த ஆயுதங்கள். புன்னகை பல பிரச்சனைகளைத் தீர்க்கும்; மௌனம் அவற்றை வர விடாமல் தடுக்கும்.

11) முடியுமா என்று சந்தேகிக்காமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சிப்பதே வெற்றிக்கான வழியாகும்.

12) விடியும் என்ற நம்பிக்கையுடன் உறங்குவோம்; ஆயின் முடியும் என்ற நம்பிக்கையுடன் எழுவோம்! சாதிப்போம்!

மொழிகளைத் திரட்டியவர் :

– சுதா இளங்கோவன்

# திருவிளையாடற் புராணம்

## 57. வலை வீசின படலம்

– சிவகாமியின் செல்வன்
டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்

### மீனாட்சி பெற்ற சாபம்:

பேரழகனும், பேராற்றல் உடையவனும் ஆலவாயில் எழுந்தருளியுள்ள அண்ணலுமாகிய சோமசுந்தரக் கடவுள், கன்னியாகிய மீனாட்சிக்குத் தனியிடத்தில் இருத்தி மறையின் உட்பொருளை உபதேசித்தருளினார். ஆனால் ஏதோ காரணம் கருதி அவர் அவ்வுபதேசத்தை ஆழ்ந்து கவனிக்கவில்லை. இதனை அறிந்த பெருமான் மறைப்பொருளை விருப்பமின்றிக் கேட்டாய். இக்குற்றத்தினால் பரதவர் (வலைஞர்) குலத்தில் பிறக்கக்கடவாய் என்று பணித்தார். தன் தவற்றை உணர்ந்த அம்மை தம்மை காத்தருள வேண்டினார்.

உமையின் துன்பத்தைக் கண்டு உள்ளம் இரங்கிய பெருமான் ''கடற்கரையில் உள்ள சோலையில் வாழும் பரதவ மன்னனுக்கு மகளாய் அங்கு நீ வளர்கையில் நாம் வந்து உன்னை மணந்துகொள்வோம் என்றார்.

### சிவகுமாரர்களின் சினம்:

அன்னையை எண்ணிய விநாயகரும் முருகரும் இந்த நிகழ்வு இந்த ஞானநூல்களால் அல்லவோ விளைந்தது என்று சினந்து அங்கிருந்த நூலோலைகளை எல்லாம் தன் துதிக்கையால் எடுத்து கடலில் எறிந்தார். முருகரும் தம் பங்கிற்கு பெருமான் கையிலிருந்து சிவஞானபோத நூலினை விரைந்து பிடுங்கி கடலில் வீசி எறிந்தார்.

### சிவனின் சீற்றம்

வாயில் காக்கும் நந்திதேவரை அழைத்தார் பெருமான்.நாம்இருக்கும்சமயம் அறியாமல்இவர்களை (விநாயகர், முருகர்) ஏன் உள்ளே அனுமதித்தாய் என்று சினந்து, 'நீ சுரா மீனாகப் பிறந்து ஆழ்கடலில் உழலக் கடவாய்' என்று சாபமிட்டார். விநாயகரைச் சபித்தால் அது தனக்கே ஆகும் என்பதால் அவரை விடுத்து முருகரை வணிகர் குலத்தில் ஊமையாய்ப் பிறக்கக் கடவாய் என்று பணித்தார்.

பாண்டிய நாட்டின் கீழக்கரையில் பாக்கம் என்ற ஊரில் வாழ்ந்த பரதவ மன்னன் நெடுங்காலம் குழந்தை இன்றி வருந்தி வந்தான். சிவபக்தனான அவன் ஒரு தோப்பினுள் சென்றுகொண்டிருந்த பொழுது ஒரு புன்னை மர நிழலில் ஒரு பெண் மகவைக் கண்டான். அழுதுகொண்டிருந்த அக்குழந்தையை அள்ளி எடுத்துச் சென்றான். அருமை பெருமையுடன் வளர்த்து வந்தான்.

சுறா மீனாகக் கடலில் பிறந்த நந்திதேவர் கடலில் செய்த அட்டூழியங்கள் எண்ணில. தோணி, படகுகளை தாக்கிக் கவிழ்ப்பதும், மரக்கலங்கள் போக முடியாதவாறு தடுப்பதும் அதன் பெரும் பணியாக இருந்தது.

இந்தச் சுறாவினை எவராலும் பிடிக்க முடியவில்லை. பரதவ மன்னன் இச்சுறாவை எவன் பிடித்து அடக்குகிறானோ அவனுக்கு எனது மகளை மணமுடித்துக் கொடுப்பேன் என்று அறிவித்தான்.

சிவபெருமான் பரதவ வேடத்தில் பரதவ மன்னன் முன்பு தோன்றினார். ''நீ யார்?''என்றான் பரதவர் தலைவன். ''நான் மதுரைவாழ் வலைஞர்களின் அரசகுமாரன், பெருமீன்களை வலை வீசிப் பிடிப்பதில் வல்லவன்'' என்றார்.

''இக்கடலில் ஒரு பெருஞ்சுறா சீற்றம் கொண்டு அலைகிறது. அதனைப் பிடித்துக் கொடுத்தால் உனக்கு என் மகளை மணமுடித்துக் கொடுக்கிறேன்'' என்றான் பரதவர் மன்னன்.

வலைஞனாக வந்த பெருமான் ஈயமணிகள் பொருந்திய ஒருவலையைஎடுத்துக்கொண்டு கடலைக் கிழித்துச் செல்லும் படகு ஒன்றில் ஏறிக்கொண்டார். சுறாவைக் குறிவைத்து வலை வீசினார். சுறா வலையில் சிக்குண்டது. அதனை இழுத்து வந்து கரையில் போட்டார் பெருமான். மனமகிழ்ந்த பரதவர் தலைவன் தன் மகளை, வலைஞனாக வந்து சுறாவை வென்ற பெருமானுக்கு மணம் செய்து கொடுத்தான்.

திருமணக் கோலத்துடன் சிவனார் வலைஞர் மகளான உமாதேவியாருடன் விண்ணில் எழுந்தருளினார். கடற்கரையில் கிடந்த சுறா நந்திதேவராக எழுந்தார். விநாயகரும், முருகப் பெருமானும் சுவடிகளுடன் அங்கு தோன்றினர். பின்னர் சிவபெருமான் உபதேசம் கேட்க விரும்பிய உமாதேவிக்கும், அறுபதினாயிரம் சிவனடியார்க்கும், சிவயோகியர்க்கும் மறையின் மறைபொருளை உபதேசித்தார். அவர்தம் பற்றை ஒழித்தார். அவர்கள் அனைவர்க்கும் வீடு பேற்றினை அருளினார். பின் தனது தேவியுடன் மதுரையம்பதி சென்றடைந்தார். அங்கிருந்து அருள்புரிந்து வரலானார்.

## சரித்திர சங்கமம் - தீபங்களின் தீபாவளி

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை. திருமால் வராகமூர்த்தியாக அவதரித்து பூமாதேவியை அசுரர்களிடமிருந்து காத்தார். அவர்களுக்குப் பிறந்தவளே பவுமன் எனும் நரகாசுரன். அசுர வதத்தின் போது பிறந்தவனாதலால் அசுரகுணங்கள் கொண்டவனாக இருந்தான். அவனை அழித்த நாளே தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. ஐப்பசியில் அத்திருநாள் வருவது ஏன் ? நியாயத்தின் குறியீடான தராசை, 'துலாக்கோல்' என்பர். ஐப்பசிக்கு துலா மாதம் என்று பெயர். வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி தராசு போல நியாய வழியில் நடப்பவரே நீதிமான். உயிர்களை எல்லாம் துன்புறுத்திய நரகாசுரனை, தங்களின் மகன் என்ற குறுகிய எண்ணத்துடன் திருமாலும், சத்தியபாமாவும் ஆதரிக்கவில்லை. தாயாக இருப்பினும் சத்தியபாமா, நரகாசுரனைக் கொன்று மக்களைக் காப்பாற்றினார். நீதி உணர்வும், மன உறுதியும் வேண்டும் என்பதே தீபாவளி உணர்த்தும் பாடம்.

வட இந்தியாவில் இராமபிரானும், சீதாதேவியும் வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பிய நாளாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. நகர் முழுவதும் விளக்குகளை வரிசையாக ஏற்றி, அழகு படுத்தினார்கள். அதனாலேயே இத்திருநாளுக்கு தீபாவளி என பெயர் வந்தது. இப்போது நாம் தலைப்பிற்குள் செல்வோம்.

1) 7-ஆம் நூற்றாண்டில் பேரரசர் ஹர்ஷர் தீபாவளியை 'தீப பிரதிபா உத்ஸவம்' என்ற பெயரில் விளக்குகள் ஏற்றியும், புதிதாக திருமணமானவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும் கொண்டாடியதாக அவர் எழுதிய 'நாகானந்தா' வில் கூறியுள்ளார். தலைதீபாவளி ஆரம்பமான நூற்றாண்டு.

2) 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சமஸ்கிருத நூலான 'காவ்ய மீமாம்ஸா' வின் ஆசிரியர் ராஜசேகர் தீபாவளியை 'தீபமாலிகா' என்று குறிப்பிட்டதுடன், வீடுகளுக்கு (சுண்ணாம்பு) வெள்ளை அடித்து, வீடு, தெருக்களில் இரவில் எண்ணெய் விளக்குகள் ஏற்றி வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார். (இன்றளவும் வடமாநிலங்களில் தீபாவளிக்கு முன் வீட்டினைச் சுத்தம் செய்யும் பழக்கம் உள்ளது; (தமிழகத்தில் பொங்கல் பண்டிகையின் போது செய்வது போல)

3) 10-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ராஷ்டிர கூட மன்னர் 3-ஆம் கிருஷ்ணரின் செப்பு பட்டயம் (939-967) 'தீபோத்ஸ்வா ' என தீபாவளியைக் குறிப்பிடுகிறது.

4) ஸ்ரீரங்கம் கோவிலில் உள்ள கல்வெட்டில், சேரநாட்டைச் சேர்ந்த ராமவர்மன் குலசேகரன் தீபாவளியைக் கொண்டாட நிவந்தனங்கள் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5) 11-ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தில் இருந்து வந்த யாத்ரீகர் அல்பெருனி,இந்தியாவைப்பற்றியதனது குறிப்பில் தீபாவளியை வட இந்தியர்கள் அமாவாசை தினத்தன்று கொண்டாடியதாக குறிப்பிட்டுள்ளார்.

6) 1420-ல் விஜயநகரத்தைச் சேர்ந்த முதலாம் தேவராயரின் ஆட்சிக் காலத்தில், இத்தாலியைச் சேர்ந்த வணிகரும், வரலாற்று ஆய்வாளருமான நிக்காலோ டி காண்டி ஹம்பி நகருக்கு வந்தார். அவர் மக்கள் கோவில்களுக்கு உள்ளேயும், வெளியேயும் விளக்குகளை ஏற்றி, குடும்பங்கள் ஒன்று கூடி புதிய ஆடைகள் அணிந்து, ஆடிப்பாடி விருந்துண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

7) 1520-களில் இந்தியாவுக்கு வருகை புரிந்த போர்த்துக்கீசிய பயணி டொமிங்கோஸ் பயஸ், அக்டோபரில் தீபாவளி அன்று வீடு, கோவில்களில் வரிசையாக நிறைய விளக்குகளை ஏற்றி கொண்டாடியதாக குறித்துள்ளார்.

8) திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 1542-ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டில், தீபாவளிக்கு அதிரசம் செய்வதற்காக அரிசி கொடுக்கப்பட்ட தகவல் உள்ளது.

9) திருவாரூர் மாவட்டம் சித்தாய்மூர் பொன்வைத்த நாதர் கோயில் செப்பேட்டிலும் தீபாவளி குறித்த செய்திகள் உள்ளன.

10) 1753-ஆம் ஆண்டில், தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாப்சிங் ஆட்சிக்காலத்தில், சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, பலகாரங்கள் செய்து தீபாவளி கொண்டாடியதாக கூறுகிறார்.

11) 1799-ஆம் ஆண்டு கவர்னராக இருந்த சர் வில்லியம் ஜோன்ஸ் தீபாவளியன்று மரங்கள், வீடுகளில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன என குறிப்பிடுகிறார். பல்வேறு பகுதிகளிலும் வாழும் இந்து மத மக்கள் தீபோத்ஸ்வா, தீபாவளி, தீவாளி என இப்பண்டிகையை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

திரட்டியவர் – திருமதி. வனஜா இளங்கோவன்.

## விட்டலின் பக்தர் - பரம ஞானி ஞானேஷ்வர்

ஞானி ஞானதேவர் அல்லது ஞானேஷ்வர் அல்லது தியானேஷ்வர் என்பவர் மராத்திய வைணவ அடியார். விட்டல பாண்டுரங்கனின் பரம பக்தர். இவர் ஒரு வர்க்காரி. (நாம பஜன் செய்து கொண்டு பண்டரிபுரம் செல்பவர்) இம்மாதம் இந்த மகானைக் குறித்து பார்ப்போம்.

புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றான கோதாவரி நதிக்கரையில் தற்போதைய பைத்தான் மாவட்டத்தில் அபேகான் எனும் சிற்றூரில் 1275–ஆம் வருடம் பிறந்தவர். அரண்மனையில் கணக்கராக இருந்த, கருணீகர் வகுப்பைச் சேர்ந்த கோவிந்த பண்டிதர், அவரது மனைவி நிருபமாவிற்கும் பிறந்தவர் விடோபா. தனது எட்டுவயதிற்குள் பதினெட்டுபுராணங்களையும், வேத உபநிஷதங்களையும் கற்றறிந்தார். திருமணத்திற்கு விருப்பம் இல்லாத விடோபா க்ஷேத்ராடனம் செய்ய விரும்பி, பெற்றோர்களிடம் ஓராண்டிற்கு அனுமதி பெற்று கிளம்பினார். வழியில் அலங்காவதி எனும் ஊரில் உள்ள சக்ரதீர்த்தத்தில் நீராடி தியானத்தில் ஆழ்ந்தார். பலரும் விடோபாவின் முகத்தில் தெரியும் தேஜஸ் கண்டு அதிசயத்தனர். அதிலொருவர் செல்வந்தரான சீதோ பந்து என்பவர். விடோபாவை அவரது இல்லத்திற்கு விருந்தினராக எழுந்தருள அழைக்க, விடோபாவும் சம்மதித்து அவரது இல்லம் அடைந்தார். விருந்திற்குப் பின் பகவத் விஷயங்களை நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தனர். அவரின் அற்புதமான அறிவின் ஆற்றல் கண்டு அனைவரும் வியந்தனர்.

அன்றிரவு பாண்டுரங்கன், சீதோபந்துவின் கனவில் தோன்றி, அதிதியாக வந்திருப்பவன் சர்வக்ஞன். அந்த உத்தமனுக்கு உன் மகளை மணம் முடிப்பாயாக! என திருவாய் மலர்ந்தருளினார். விடோபாவிடம் அவரது கனவைக் கூற, க்ஷேத்ராடனத்திற்கு அனுமதி வாங்கி வந்து, திருமணம் எப்படி செய்து கொள்ள முடியும் என மறுத்துவிட்டார். மேலும் உங்களுக்கு சேவை சாதித்த பாண்டுரங்கன் என்னிடம் கூறட்டும் என்றார். அடுத்த நாள் இரவு பாண்டுரங்கன் விடோபாவின் கனவிலும் சீதோபந்துவின் மகள் ருக்மாபாயை மணம் புரிந்து கொள்ள கூறவும், அடுத்த நாள் அதிகாலை யாரிடமும் கூறிக்கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியேறும் போது, கோலம் போட்டுக் கொண்டிருந்த ருக்குமாபாய் அவர் பின்னாலேயே சென்று அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினாள். அநேகர் கூடிவிட வானில் ஒரு அசரீரி பிறந்தது. 'விடோபா' உனது பிடிவாதத்தை விட்டு விட்டு, ருக்குமாபாயை மணந்து இன்புற்று வாழ்வாயாக! என்றது. அன்றைய தினமே பாண்டுரங்கன்சன்னதியில்மணம்முடித்து,சிலநாட்கள் அங்கு தங்கியிருந்த பின், க்ஷேத்ரானம் புறப்பட மாமனாரும் சேர்ந்து புறப்பட்டார். சில மாதங்களுக்குப் பிறகு விடோபாவின் பெற்றோர் வீட்டிற்கு அனைவரும் புறப்பட்டுச் சென்றனர். சந்நியாசி ஆகிவிடுவானோ என்று பயந்த புதல்வன் மனைவியோடு வந்தது கண்டு பெற்றோர் ஆனந்தம் அடைந்தனர். இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல், இருவருமே தவ வாழ்க்கை வாழ்ந்தனர். விடோபாவின் பெற்றோர்கள் பரமனின் பாதார விந்தங்களைச் சரணடைய, அவர்களின் அஸ்தியைக் கரைக்க ருக்குமாபாயை அவரது அப்பா வீட்டில் விட்டு விட்டு காசிக்குச் சென்றார். ஊர் திரும்ப மனமின்றி அங்கேயே தங்கியிருக்க, அங்கு மக்களுக்கு அரிய போதனைகளைக் கூறி நல்வழிப்படுத்திக்கொண்டிருந்தஸ்ரீபாதசுவாமிகளைத் தனது குருவாக ஏற்றுக்கொண்டு, உபதேசம் பெற்று, அவரது மடத்திலேயே தங்கிவிட்டார்.

ஸ்ரீபாத சுவாமிகள் க்ஷேத்திராடனம் புறப்பட்டு, அலங்காபதியை அடைந்தார். அங்கு கணவருக்காக மங்கள கௌரி நோன்பு பூண்டிருந்த ருக்குமாபாயும், சீதோபந்துவும் குருவைத் தரிசித்து ஆசி பெற்றனர். குருவோ, "சிரேஷ்டமான நான்கு செல்வங்களைப் பெற்று பெருமை அடைவாய்" என ருக்குமாபாயை வாழ்த்தினார். சீதோபந்து அவளது வாழ்க்கையை விவரித்ததும், குருவுக்கு அவன் கணவன் தனது சீடன் விடோபாதான் என புரிந்தது. உன்னைப் பிரிந்த கணவன் கூடிய விரைவில் உன்னோடு வந்து சேருவான் என ஆசி கூறினார். அவர் காசிக்குத் திரும்பியதும், விடோபாவிடம், "இல்லறமின்றி துறவறம் இல்லை; இல்லறத்தை இனிது நடத்தியே சுலபமாக பேரின்ப வீட்டைக் காணலாம்" எனக் கூறி அலங்காபதிக்கு விட்டோபாவை அழைத்துச் சென்று இருவரையும் இணைத்து வைத்தார். சந்நியாசியாகச் சென்றவர் திரும்பவும் கிருகஸ்தனாக வாழ்வதை ஏற்காத ஊர் மக்கள் அவர்களை பகிஷ்காரம் செய்தனர். அதனால் அவர் ஒரு இரவு கானகம் புறப்பட, மனைவியும் அவரைப் பின் தொடர்ந்தாள். கானகத்தில் குடிலமைத்து வாழ்க்கையைத் தொடங்கி, மூன்று புத்திரர்களையும், ஒரு நற்புத்திரியையும் பெற்றனர். பிரம்மா, விஷ்ணு, சிவன் அம்சத்தில் புத்திரர்களும், பராசக்தியின் அம்சமாக மகளும் பிறந்தனர். அவர்கள்

முறையே சோபதேவ், ஞானேஷ்வர், நிவிருத்திநாத் மற்றும் முக்தாபாய் ஆவர்.

திருமாலின் அம்சமான ஞானேஸ்வரர், சிறு வயதிலேயே வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் ஆகியவற்றை கற்று, அதில் சிறந்து விளங்கினார். அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும்படி எளிய முறையில், அவரது தாய்மொழியான மராத்தியில் போதித்தும் வந்தார். பாண்டுரங்க பக்தரான இவர் 'ஞானராஜா'வாக மக்களிடையே பக்தி யோகத்தைப் பரப்பினார். அவர் மக்களுக்கு ஞானயோகம் எனும் பாதையை பரிந்துரைக்கவில்லை. சாதி மத பேதம், ஆண் பெண் பாகுபாடு, பொருளாதார அந்தஸ்து இவற்றின் அடிப்படையிலின்றி பக்தி யோகம்; நாம சங்கீர்த்தனம் மூலமும் இறைவனை அடைய முடியும் என்பதை மக்களுக்கு உணர்த்துவதையும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் வாழ்வின் லட்சியமாக கொண்டிருந்தார். யோகிகள் கடுமையான பயிற்சிகள் மூலம் அடையும் அனுபவத்தை, பக்தர்கள், தன் வீட்டிலிருந்தபடியே அன்பு மற்றும் கடவுளையே நினைத்து வாழ்வதன் மூலம் எளிதாக அடைய முடியும் என்பதை உணர வைத்தார். பண்டரிபுரத்திற்கு யாத்திரை மேற்கொள்வதே அனைத்து வழிபாட்டு முறைகளிலும் மேலானது என்றார். மராட்டிய மாநிலத்தில் இன்றளவும் நிலவி வரும் வர்க்காரி வழிபாட்டினைத் தொடங்கியவர் இந்த மாபெரும் ஞானியே!

ஒரு நாள் சிறுவனாக இவர் மக்களுக்கு வேதங்களுக்கு எளிய முறையில் விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஆச்சார்யார்கள், ஞானேஸ்வரரிடம், "முறையற்ற வாழ்க்கை வாழ்ந்த அந்தணன் பெற்ற குழந்தைகள் நீங்கள். வேதம் ஓதுவதற்குரிய தகுதி உங்களுக்கு இல்லை. அது எம்மைப் போன்று ஆசாரத்துடன் வாழும் பண்டிதர்களுக்கு மட்டுமே உரியது" என்றனர். அவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தில் இறுதியில் ஞானேஸ்வரர் அங்கு வந்த ஒரு எருமை மாட்டினைக் காண்பித்து "இத்தனை நேரம் உங்களுடன் வாதம் செய்ததற்கு, இந்த எருமையின் காதில் ஏதாவது கூறியிருந்தால் புண்ணியமாக இருந்திருக்கும்' என்றார். பண்டிதர்களும் உங்களுடைய தகுதிக்கு எருமைமாட்டுக்கு உபதேசம் செய்வதுதான் பொருந்தும் என்றனர். உடனே ஞானதேவர் எருமையின் காதில் வேதம் ஓத, தர்மத்தின் அதிபதியான எமதர்ம ராஜாவின் வாகனம், நான்கு வேதங்களில் இருந்தும் ஒவ்வொரு சுலோகங்களை உரைத்தது. ஞானதேவரின் கேள்வியான பிறப்பாலா தவத்தாலா? பிரம்மஞானத்தாலா? கர்ம காரியங்களாலா? ஒரு மனிதன் பிராமணன் ஆகிறான் என்பதற்கு பதிலாக

"ஜன்மநா ஜாயதே சூத்ர; கர்மணா ஜாயதே த்விஜ வேதோ முக்யஸ்து விப்ராணாம் ப்ரஹ்மஞானம்து ப்ராஹ்மணாம்" என கூறியது. அதாவது பிறவியினால் சூத்ரன்; கர்மானுஷ்டங்களால் பிராமணனாக மாறுகிறான்; வேதமும் அதன் பொருளான பிரம்மத்தை அறிதலுமே முக்கியமாகும். அதைக் கேட்ட பண்டிதர்கள், ஞானேஸ்வரரின் காலடியில் வீழ்ந்து வணங்கினர். ஞானதேவரின் பெருமையை உலகறியச் செய்தவர் சித்தபுருஷர் சாங்கதேவர் ஆகும். அவர் தனது யோகசக்தியின் மீது அதீத கர்வம் கொண்டவர். தனது யோகத்தின் மூலம் அனைத்து உயிர்களையும் வசப்படுத்தும் வித்தை அறிந்தவர். ஞானேஸ்வரரின் புகழைக் கேள்வியுற்று, அவர் ஒரு சிறுத்தையின் மீதமர்ந்து, கழுத்தில் ஒரு பாம்பினைச் சுற்றியபடி வந்தார். அவரது செயலைப் பார்த்து அனைவரும் மிரண்டனர். அமைதியாக தனது பீடத்தில் அமர்ந்திருந்த ஞானேஸ்வரர், தனது கைகளை உயர்த்த, அவரது பீடம் பின்னால் நகர்ந்து சென்றது. உயிருள்ள பொருட்களைக் கட்டுப்படுத்தியவர் அந்த சித்தர்; ஆனால் உயிரற்ற பொருளையும் கட்டுப்படுத்திய ஞானேஸ்வரரின் யோகத்திறமையை உணர்ந்து, அவரின் திருவடிகளில் பணிந்து கர்வம் நீங்கப் பெற்றார்.

ஞானதேவர், தனது அண்ணன் நிவிருத்திநாத் மகானையே குருவாக ஏற்றுக்கொண்டார். தனது 18–ஆம் வயதில் பகவத்கீதையை மராத்திய மொழியில் விளக்கத்துடன் எழுதினார். அந்நூல் 'தியானேஷ்வரி' எனவும் 'பாவர்த்த தீபிகா' எனவும் பெயர் பெற்றது. 'அம்ருதானந்தபவ' எனும் அபங்கங்களையும் எழுதி உள்ளார். இவைகளே தொன்மையான மராத்திய இலக்கியமாகும். இவர் தனது 21–ஆம் வயதில் பூனாவின் அருகில் இருக்கும் ஆளந்தி எனும் கிராமத்தில் ஜீவசமாதி அடைந்தார். அவரின் நினைவாக வருடந்தோறும் ஜூலை மாதம் 'சந்த் ஞானேஸ்வரர் மகாராஜா பால்கி யாத்திரை', 700 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'இறைவனின் பேரருளையும், ஞானத்தையும் பெற வயது ஒரு பொருட்டே இல்லை' என்பதை உணர்த்திய இம்மகான் ஞானேஸ்வரரை பக்தியுடன் நினைவு கூர்வோம்! அவர் பாத மலரடி வணங்குவோம்!

– திருமதி. லலிதா வேலாயுதம்
9940595359

## கம்பன் கண்ட பாசப் பசுவும் கன்றும்

அன்பினை வெளிப்படுத்துவதற்கு பக்தி இலக்கியங்கள் மற்றும் காப்பியங்கள் தாய்ப்பசுவினையும் அதன் கன்றினையும் உதாரணம் காட்டி நமக்கு புரிய வைப்பதனை கை வந்த கலையாக செய்து காட்டுவர். அந்த வகையில் மாணிக்கவாசகர் திருக்குற்றாலத்தில் இருக்கின்ற சிவபெருமானிடம் நெஞ்சைப் பறிகொடுத்தவராக, எனக்கு உற்றார் உறவினர்கள் வேண்டாம், ஊர் வேண்டாம், புகழ் வேண்டாம் எனக் கூறுவதோடு அதற்கும் மேலாக எனக்கு கற்றவர்கள் கூட வேண்டாம் எனவும் கூறி, திருக்குற்றாலத்தில் இருக்கின்ற சிவபெருமானே! கன்றினை ஈன்ற பசுவின் மனத்தைப் போல உன் ஒலிக்கின்ற கழல் அணிந்த பாதத்தினையே நினைந்து மனம் கசிகின்றேன் என்ற கருத்திலே வெளிப்படுத்துகின்றார்.

இதனை, உற்றாரை யான் வேண்டேன் ஊர்
வேண்டேன் பேர்வேண்டேன்
குற்றாலத்துறை அமைந்துறையும் கூத்தா உன்
விரையாற்கழற்கு
கற்றாவின் மனம் போல கசிந்துருக வேண்டுவனே!

(கன்று+ஆ=கற்றா) என்ற பதிகத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

அடுத்து, திருமங்கையாழ்வாரும் இதனைப்போலவே திருநறையூரில் இருக்கின்ற திருநறையூர் நம்பியிடம் தனக்கு மீண்டும் பிறவாமை வேண்டும் எனக்கூறப் போந்தவர், பாலினை மடியில் வைத்துள்ள இளமை பொருந்திய பசு எவ்வாறு தன் இளங்கன்றினையே நினைத்துக் கொண்டிருக்குமோ அதனைப்போலவே நானும் திருமாலாகிய உன்னையே நினைத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதனை,

கறவா மடநாகு தன்கன்றினை உள்ளினார்போல
மறவாது அடியேன் உனையே நினைக்கின்றேன்
நறவார் பொழில்சூழ் நறையூர்நின்ற நம்பி
பிறவாமை வேண்டும் எனைப் பணி எம்பிரானே!

என்ற பாசுரத்தின் மூலம் புலப்படுத்துகின்றார்.

இனி, இதனையே கம்பன் தன் காவியத்தில் தாய்ப்பசுவினையும் கன்றினையும் வைத்து, வெவ்வேறு வகையில்எவ்வாறெல்லாம்அன்பினைவெளிப்படுத்திக் காட்டுகின்றார் என்பதனைக் காண்போம்.

தசரதன் ஒரு நாள் அரண்மனையில் படிமக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் காதோரத்தில் ஒரு நரை முடியினைக் கண்டவுடன், தனக்கு வயதாகிவிட்டது. எனவே இராமனிடம் இனிமேல் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற வேண்டும் என முடிவெடுக்கின்றான். மறுநாள் தன் அமைச்சர்கள், ஆலோசகர்கள் நிறைந்த கூட்டத்தைக் கூட்டி, தான் இராமனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற விரும்புவதாகக் கூறி, அவர்களின் கருத்தினைக் கேட்கின்றான். அப்பொழுது, ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதனை கம்பன் வெளிப்படுத்துகின்ற அழகே அழகு!

தசரதன் கூறியதைக் கேட்டவுடன் அரச சபையில் இருக்கின்றவர்களுக்கு நாட்டை இராமன் ஆளப்போகின்றான் என்று ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. அதே நேரத்தில் தசரதனைப் பிரிய வேண்டி வருமே என்ற வருத்தமும் அவர்கள் மனத்தில் கரை புரண்டு ஓடுகின்றது. இக்கருத்தினை விளக்கும் வகையில், ஒரு பசுவானது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கன்றினை ஈன்றது. இப்பொழுது இன்னொரு கன்றினை ஈன்றது. இரண்டாவது கன்றினுக்கு பால் கொடுக்கின்ற மகிழ்ச்சியில் இருக்கின்ற பொழுது முதல் கன்றும் ஆர்வத்தில் பால் குடிக்க வருகின்றது. அந்நேரத்தில், அந்த தாய்ப்பசுவானது முதல் கன்றினுக்கு பால் கொடுக்க இயலவில்லையே என வருந்துவதுபோல வருந்தினார்களாம். இதனைக் கம்பர்,

'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவினை ஒத்தார்' என்ற வரியின் மூலம் அங்கு இருந்தவர்களின் மனநிலையை நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அடுத்து, இராமன் கைகேயியின் ஏவலால் காட்டிற்குச் சென்றான் என்பதனைப் பெரியாழ்வார் தன் ஒரே பாசுரத்தின் மூலம் நன்கு விளக்குவார். அதாவது சுமித்திரை, இராமா நீ காட்டிற்குப் போகாதே என்று அழ, கோசலையோ, நீ காட்டிற்குப் போகின்றாயா? என்று கூறி அழுது கொண்டே இராமன் பின்னால் தொடர்ந்து வர, யமனைப் போன்ற கொடிய குணம் கொண்ட தாயாகிய கைகேயி சொன்னதற்காக கொடிய கானகம் சென்ற இராமன்.

– தொடரும்.

அரங்க தியாகராஜன், மயிலாடுதுறை
**94867 18234**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மறைவு : 21–12–2024

## திருமதி. V. கமலா

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் திரு. M.S. அறவாழி (எ) வைத்தியநாதன் அவர்களின் அன்பு மனைவியும் எனது தாயாருமான திருமதி. V. கமலா அவர்கள் 21–12–2024 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

ஓராண்டு உருண்டோடிவிட்டது நீங்கள் எங்களை விட்டு பிரிந்து ஆயினும் எங்களது நெஞ்சங்களில் நீங்கள் நீக்கமற நிறைந்துள்ளீர்கள் என்றென்றும் நீடிக்கும் இந்நிலை

என்றும் உங்கள் நினைவில் வாழும்

கணவர் **M.S. அறவாழி (எ) வைத்தியநாதன்**

மகள் : **R. ஷர்மிளா** மருமகன் : **N. ராம்குமார்**

பேரன் **R. கிரித்திக்** (எ) **ஆதவ்**

புதுப்பத்தூர்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
1940

மறைவு:
09–11–2025

தரங்கம்பாடி வட்டம், ஆக்கூர் கிராமம்

தெய்வத்திரு. **N.ஜம்புலிங்கம் பிள்ளை** அவர்களின் துணைவியார்

## J.சரோஜா அவர்கள்

நிகழும் விசுவா வசு வருடம் ஐப்பசி மாதம் 23ம் தேதி (09–11–2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகன்:
தெய்வத்திரு. **J.கோபாலகிருஷ்ணன்**
மருமகள்: **G.தீபா**
பேரன்: **G.சித்தார்த்**, M.S.,
பேத்தி: **G.பார்கவி**, C.A.,
சென்னை.

மகன்:
**J.ராஜன்பாபு**
மருமகள்:
**R.சாந்தி**
பேரன்:
**V.வினோத்**, M.B.A.,
பேத்திகள்:
**R.சிந்து**, M.B.A.,
Dr. **R.நர்மதா**, B.D.S.,
புதுச்சேரி.

கொள்ளு பேத்தி: **V.இனியா**



நினைவஞ்சலி
13ம் ஆண்டு
C.இலஞ்சியம் அம்மாள் அவர்கள்
உதிர்ந்தது : 12.12.2012
5ம் ஆண்டு
C.கோவிந்தராஜன் பிள்ளை
தலைமையாசிரியர் பணி நிறைவு அவர்கள்
உதிர்ந்தது : 26.11.2020
எடுத்துகட்டி-சாத்தனூர்
என்றும் எங்கள் மனதில் வாழும்... உங்கள் அன்பு நினைவுகளுடன்...
மகன்கள், G.குமார் CREW (P) LTD - APL GUJARATH K.கலாவதி
Er.G.சண்முகம் S.பிரியா
திவ்யா கன்ஸ்ட்ரக்ஷன் & டிரான்ஸ்போர்ட்,
மகள் – மருமகன் M.சித்ரா தலைமையாசிரியர் P.முத்துக்குமார் CREW-MTPS-METTUR
பேரன் – பேத்திகள் E.கிருஷ்ணகாந்த்,B.E.,M.B.A.,. K.திவ்யா,M.E.,
M.கௌதம்ராம்,B.E., G.ஓவியா,B.E.,
S.கிஷோர், S.திஷா, - K.ஸ்ரீ, K.சூரியா கொள்ளு பேத்தி, பேரன் K.பிரதிக்ஷா, K.பிருத்விகா G.திவிஷிக்
மணல், ஜல்லி, கிராவல், M சண்ட் சப்ளையர்ஸ்
செல் : 9443785264
மாப்படுகை - மயிலாடுதுறை

# எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி







தோற்றம்
**15–08–1947**

மறைவு
**15–12–2017**

## திருமதி. A. தனலெட்சுமி

கானூர்

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் தியாகியாய் வாழ்ந்து, எங்கள் அனைவர் இதயத்திலும் நீங்கா இடம் பெற்ற நீ, எங்களை விட்டு விண்ணுலகம் சென்று எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனாலும் எங்கள் அனைவரின் இதயத்திலும் உன் நினைவுகள் என்றொன்றும் நிலைத்து நிற்கும் என்றும் உன் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்.

கணவன் – **செ. ஆதிவராகன்,** Retd HM. கானூர்
Cell : 9487921285
கௌரவத் தலைவர். எம்.ஆர்.வி. நகர் குடியிருப்போர் நலச்சங்கம், லால்புரம், சிதம்பரம்.
மூத்த துணைத்தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம் சிதம்பரம் வட்டம்.

மருமகன் : திரு. **R. கார்த்திகேயன்,** B.Com Dip.in Cop., (பண்ணப்பட்டு)
மகள் : திருமதி. **K. தமிழ்ச்செல்வி**
மருமகன் : திரு. **Dr. S. விழிநாதன்,** M.Sc., Phd., (பனங்காடி)
மகள் : திருமதி. **V. உமாராணி,** B.Com., Dip. in Cop.,
மகன் : திரு. **A. அன்புச்செல்வன்,** B.E.., Chief Manager T.S.II - N.L.C. நெய்வேலி
மருமகள் : திருமதி. **A. கவிதா**

பேரன் – பேத்திகள்

**A. பூரணி** M.Sc.,
**Er. K. நரேந்திரன்,** B.E., (USA)
**Er. N. கலைவாணி,** B.E.
**Dr. A. வனிதா,** M.B.B.S.
**Dr. P. பரத்வாஜ்,** MD

கொள்ளு பேத்திகள்

**N. மித்திரவள்ளி** **N. கீர்த்திலெட்சுமி**

# 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மெய்பொருள் காண்பது அறிவு** – குறள்







தோற்றம்
10.10.1932

மறைவு
13.12.2002

நூலாசிரியர் (1966), பதிப்பாளர், நல்லாசிரியர் (1990),
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், காத்திருப்பு கிராமம்
தெய்வத்திரு. **தி. அருணாச்சலம் – அ. அபூர்வம்** இவர்களின் மூன்றாவது மகனும்,
தமிழ்நாடு அரசு விருதினை இரு முறை பெற்றவரும்,

## பேராசிரியர். அ. கிருட்டிணமூர்த்தி எம்.ஏ.பி.டி.,

தலைமை ஆசிரியர் – அரசர் மேனிலைப்பள்ளி, தஞ்சாவூர்.
(1977 – 1991)

**நினைவைப் போற்றும் குடும்பத்தினர்**

திருமதி. **செல்லம் கிருட்டிணமூர்த்தி** (மனைவி)

மகள் : திருமதி. **கி. அல்லி தவத்துறைநாதன்**
மருமகன் : திரு. **இர. தவத்துறைநாதன்**

மகன் : திரு. **செம்மல் கிருட்டிணமூர்த்தி**
மருமகள் : திருமதி. **ஆனந்தி செம்மல்**

**பேத்திகள்**

திருமதி. **ஆதிரை அருண்குமார்**
திருமதி. **இலக்கியா ஸ்ரீ ஹரீஷ்**
செல்வி. **கிருஷ்ணப்பிரியா செம்மல்**

**கொள்ளு பேத்தி, பேரன்கள்**

செல்வி. **அவந்திகா அருண்குமார்**, செல்வன். **அபிநவ் அருண்குமார்**, செல்வன். **வியன் ஸ்ரீ ஹரீஷ்**

# வருந்துகிறோம்...



தோற்றம்
18.05.1927

மறைவு
11.11.2025

முன்னாள் காரைவட்ட கார்காத்த வேளாளர் சங்கத் தலைவர் &
முன்னாள் தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர்
**நெடுங்காடு, கார்காத்தார் தெரு,**

## M. சண்முகம் பிள்ளை அவர்கள்

**11-11-2025 செவ்வாய்கிழமை** காலை 11.00 மணியளவில்
இயற்கை எய்திவிட்டார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிரிவால் வருந்தும்...**

**M.S. ராஜு** (ராசி டீசல் சர்வீஸ்) – **ரெத்தினமாலா,** திருச்சி.
**S. இராஜமாணிக்கம்** (ஸ்ரீ குமரன் பிரிண்டர்ஸ்) – **வசந்தி,** நெடுங்காடு.

**மகள்கள், மருமகன்கள்,**
**பேரன்கள், பேத்திகள், கொள்ளு பேரன்கள், கொள்ளு பேத்திகள்**

**குடும்பத்தினர்கள், உறவினர்கள்,** மற்றும் **நண்பர்கள்**



MARUTHI®
LET THE SUN PAY YOUR EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR ROOFTOP SYSTEM
GET ₹0 ELECTRICITY BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th December 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

## Heartfelt wishes

**The Amirtham Restaurant team celebrated our Mr. Kailasam's 63rd birthday together with our Hotel Kanakabhishegam team members. It was a joyous occasion. We also take this opportunity to celebrate and thank all our dedicated employees who make every day special.**



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**